Regsered as a News Paper in Ceylon

★ ★

விலை: சதம் 15

"தம்மை ஆக்குபவர் தாமே."
—'ஜேம்ஸ் ஆலன்'

மில்க்வைற்
சோப்
அடையாள
முத்திரையைக்கவனித்து
வாங்கிப்
பயனடையுங்கள்

ஈழநாடு
EELA NADU
தேசிய தினசரி

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்

மாசி 13 பங்குனி 7 முஹறம் 23 (21—3—71) ஞாயிற்றுக்கிழமை இதழ் 39

# "தேசவிரோத சக்திகளை காட்டிக்கொடுங்கள்"

## பொதுமக்களிடம் பொலிசார் வேண்டுகோள்!

கோட்டை, சனி

தேசவிரோத சக்திகளைக் கண்டுபிடிக்க பொலிசாருக்கு உதவுமாறு பொதுமக்களை பொலிசார் கேட்டுள்ளனர்.

நாசவேலைகளில் ஈடுபடும் தேசவிரோத சக்திகள்பற்றி தகவல்கள் கொடுப்பவரின் பெயர்கள் இரகசியமாக வைக்கப்படுமென்றும் நிருபர்கள் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நாசவேலைகளில் ஈடுபட்டதாக மேலும் 25 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் கினிகஸ்தென்னையை அடுத்துள்ள காட்டில் குடிசையொன்றில் கைக்குண்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதோடு அங்கு வேறுபல நாசவேலைகளுக்கு உபயோகிக்கும் ஆயுதங்களும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமகமுவை என்னுமிடத்தில் றபர்நிலத்தில் 15 கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொஸ்ஹேன, பிட்டிகல, தெரினியகல, பண்டாரவளை தலாவ, ரத்தினபுரி, தெமட்டக்கொட ஆகிய இடங்களிலேயே நாசவேலையில்ஈடுபட்டுள்ளவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## கொலைகள் அதிகரிப்பு

கோட்டை, சனி

கடந்த வருடத்திலும் பார்க்க இவ்வருடம் கொலைகள் அதிகரித்துள்ளது இவ்வருடம் மார்ச் 15-ந் திகதிவரை 190 கொலைகள் நடைபெற்றன. 1970-ம் ஆகஸ்டில் 142 கொலைகள் நடைபெற்றன.

மார்ச் மாதத்தில் முதல் 15 நாட்களிலும் 33 கொலைகள் நடைபெற்றுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## "தேசிய அபிவிருத்திக்கு நிர்வாகிகளே பொறுப்பு"

— பிரதமர்

கோட்டை, சனி

தேசிய அபிவிருத்தி நாட்டின் நிர்வாகத்தை நடத்துகின்றவர்களிடமே தங்கியுள்ளது, நிர்வாக அதிகாரிகள் கடமையுணர்வுடன் ஒத்துழைக்கின்ற போது அபிவிருத்தியில் முன்னேற்றம்காணமுடியும்' இவ்வாறு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

பிரதமர் மேலும் தெரிவித்தவை வருமாறு: சொந்தக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது தேசிய அபிவிருத்தியில் கருத்து வைத்து நிரந்தர தீர்வு காணுவதற்கு முற்படவேண்டும். கடந்த சில ஆண்டுகளாக இந்த நாட்டில் அபிவிருத்திக்கான ஆக்க பூர்வமான சாதனைகளை நிறைவேற்றத் தவறி விட்டன.

எதிர் காலத்தில் சோஷலிசப் பாதையில் நாடு சுபிட்சம் அடையவும் விஞ்ஞான ரீதியில் முழுமையான நிலை உருவாகவும் பொதுசேவையாளர்கள் முற்படவேண்டும்.

## புதிய ரயில்பாதை

கோட்டை, சனி

கொழும்பு ஹோமஹமவுக்கு இடையே அகண்ட ரயில்பாதை போடப்படவுள்ளது. இதற்கா 3கோடி 70லட்சம் ரூபாய் செலவாகுமென்று கணக்கிடப்பட்டுள்ளது.

பேருநாட்டில் இன்னொரு பேரழிவு

## நிலச்சரிவில் 600 பேர் பலி

லிமா, மார்ச் 20

பேருநாட்டில் ஏற்பட்டுள்ள நிலச்சரிவொன்றின் காரணமாக சுமார் 600 பேர் பலியாகியிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டில் இங்கு ஏற்பட்ட நில அதிர்ச்சியின் பின்னர்இப்பொழுதுஇந்தப் பேரழிவு ஏற்பட்டுள்ளது.

ஒரு நகரின் சரி பாதிப் பேர் மலையொன்று சரிந்து விழுந்ததால் அழிந்துபோய் இருக்கிறார்கள். மலைச்சரிவின் காரணமாக அந்தச் சுரங்கத் தொழில் நகரத்துக்குள் பெருமளவில் தண்ணீர் பாயத்தொடங்கியிருப்பதாகவும் ஏராளமானவர்கள் தப்பிச்செல்லமுடியாமல் சிக்கிக்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. பலரை மீட்புப்படையினர் காப்பாற்றியுள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து

## பலஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் மறைவு!

### குற்றச்சாட்டுக்கு சிற்றூழியர் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலிருந்து பெருந்தொகைப் பணம் பெறுமதியான உடுதுணிகள், மற்றும் பொருட்கள மறைந்துள்ளதை பொருட்காணிப்பு உத்தியோகஸ்தர்கள் கண்டுபிடித்துள்ளதைத் தொடர்ந்து மேற்படி பொருட்களின் பெறுமதியை சிறு ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்போவதாக ஆஸ்பத்திரி நிர்வாகம் அறிவித்துள்ளது. இதை ஆட்சேபித்து தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கம் சுகாதார அமைச்சருக்கு கடிதம்

(8ம் பக்கம் பார்க்க)

மற்றும் 10,403 நைலெக்ஸ் சேலைகள்
மார்ச் 24ம் திகதி சீட்டிழுப்பில்
இறக்குமதி செய்யப்பெற்று உள்ளூரில் அச்சடித்துத் தயாரித்த 6 யார் 45"
நைலெக்ஸ் சேலைகள்
தலா ரூபா 49-50 சதத்தை விசேஷ விலையாகக்கொண்டது.
சிங்கள - தமிழ் புதுவருட விசேஷ பரிசுகளாக
தேசிய லொத்தர்சபை இவற்றை உங்களுக்கு வழங்குகிறது:
இன்றே ஒரு சுவீப் டிக்கட்டைப் பெற்று
நைலெக்ஸ் சேலையொன்றைப் பரிசாகப் பெறுங்கள்.
தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிநவிலல்

பங்குனி மாதம் 4-ந் திகதி (18-3-71) வியாழக்கிழமை எனக்கு நடந்தேறிய ஆசாரியாபிஷேக வைபவத்திலும் சிவத்திரு சிவபாதசுந்தரக்குருக்கள் அவர்களுக்கு நடாத்திய பாராட்டு பட்டமளிப்பு விழாவிலும் கலந்து கொண்டவர்களுக்கும் சிறப்புரைகள் நிகழ்த்தியவர்களுக்கும் பல வகையில் உதவி செய்த சைவக்குருமாருக்கும், ஊர் பொது மக்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வ. வே. சண்முகராஜக் குருக்கள், வீசாலை. 2717


அடைவு நகைகள்

## ஏலவிற்பனவு விளம்பரம்

தொல்புரம் இ. துரையப்பா & சன்ஸ் அடைவு கடையில் 27-2-1969 தொடக்கம் 31-12-69 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகளை 27-3-71 சனிக்கிழமை மு. ப. 8 மணி முதல் மேற்படி கடையில் வைத்து பகிரங்க ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

சி. செ. மாரிமுத்து.
Commissioner, Auctioner & Valuer.

விதானை வளவு,
சித்தன்கேணி,
19-2-71 2785



ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேசன் ஜெயலலிதா நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - லெட்சுமி முத்துராமன் - நிர்மலா நடித்த
வீட்டுக்கு வீடு

WINDSOR - JAFFNA
Winner of 11 Academy awards including "Best Picture"
From Metro - Goldwyn - Mayer
William Wyler's
Presentation of
BEN HUR
Time 10-00 A. M. 2-30, and 7-00 P. M.

நீகல் யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, 9-30
ராஜ்கபூர் நர்கிஸ் நடித்த
அவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
கல்கியில் 'சோ' எழுதிய 'யாரோ இவர் யாரோ'
தொடர்கதை முழுநீள ஹாஸ்ய படமாக...





ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
சோ - மனோரமா - வாசு
நடித்த
ஆயிரம் பொய்

கெப்பிட்டல் (கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு)
சிவாஜி காஞ்சனா நடித்த
சிவந்த மண்

வெகு விரைவில்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா
வெலிங்டன் (யாழ்நகர்)
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
நடித்த
மூன்றெழுத்து
(கலர்ப்படம்)



## பகிரங்க ஏலவிற்பனை

பாவனைக் குதவாத குளிர் சாதனப் பெட்டிகள்

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம் யாழ்ப்பாணம்

எனது காரியாலயத்திலிருக்கும் பாவனைக்குதவாத மூன்று குளிர் சாதனப் பெட்டிகள் 1971-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 28-ந் திகதி காலை 10-30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஆகக்கூடிய விலையைக் கேட்பதன் மூலம் அவற்றை வாங்குவதற்குத் தகுதி பெறும் கேள்விதாரர் உடனடியாக முழுப் பணத்தையும் செலுத்தி அவற்றை இவ்வலுவலகத்திலிருந்து எடுத்துச் செல்ல வேண்டும்.

குளிர்சாதனப் பெட்டிகளைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் காலை 9-30 மணி முதல் பிற்பகல் 4-30 மணி வரை பார்வையிடலாம். போயா தினத்திற்கு முதல்நாள் காலை 8-30 மணி முதல் பிற்பகல் 1-00 மணி வரை பார்வையிடலாம்.

(ஒப்பம்)
சின்னப்பு ராசரத்தினம்
யாழ்ப்பாணம்
சுகாதாரசேவை
அத்தியட்சகர்.

சுகாதாரசேவை
அத்தியட்சகர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
10-3-71. 3212


உல்லாச

## பிரயாணிகள் தொகை அதிகரிப்பு

கோட்டை, சனி

முன்னரிலும்பார்க்க கூடுதலாக உல்லாசப்பிரயாணிகள் கடந்த ஆண்டு இலங்கைவந்துள்ளனர். இத்தொகை 40,204ல் இருந்து 46,247 ஆக உயர்ந்துள்ளது மத்திய வங்கியின் அறிக்கையின்படி இந்தியரல்லாத உல்லாசப் பிரயாணிகள் தொகை 31,363ல் இருந்து 35,561ஆக உயர்ந்துள்ளது எனத் தெரியவருகிறது.


நாகம்ஸ்சினிமா
கல்முனை
தினசரி 6-30, 9-30
போயாநாட்கள் 2-30
சிவாஜி-சரோஜாதேவி
நடித்த
அஞ்சல்பெட்டி520

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா
நடித்த
அடிமைப்பெண்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
சத்தியன் - ஷீலா - மாது
நடித்த
செம்மீன்

MANOHARA
Jaffna
Daily 4-45, 7&9-45p.m.
Rod Steiger, Claire Bloom
in
THE ILLUSTRATED MAN
(Technicolor-Panavision)
Next Attraction
DIABOLICALLY YOURS


விவேகானந்த சபை

# இந்து சமய பாடப்பரீட்சை முடிவுகள்

கொழும்பு விவேகானந்த சபையாரால் கடந்த ஒக்டோபர் மாதம் அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சையில் கீழ்க் காணும் பாடசாலை மாணவர்கள் வித்தியாசாலைப் பரிசில்கள் பெற்றுள்ளார்கள்:

உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்- இ சகுந்தலாதேவி, சி சிவலோகநாயகி, தி சுகுமாரன்.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்- செ உமாமகேஸ்வரன், க ஜெகநாதன், கு கல்யாணி, சு மகேஸ்வரன், க சிவகுமாரி, வா சிவஞானம். வை சரோஜா, கை கார்த்திகேசு.

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம்- சி சியாமளா மு வெங்கேஸ்வரி.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி- இ தேவகி, மா புஷ்பராணி, செ குகநாதன். க சண்முகலிங்கம்.

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாசாலை- இ ஞானசௌந்தரி

கைதடி விக்னேஸ்வர வித்தியாசாலை- க மாலினிதேவி, ந தயாபரன், சி சந்திரகுமார், வி தனலட்சுமி.

துன்னாலைதெற்கு ஞானசாரியார் கல்லூரி- க சசிகரன், சி தயாபரன், க சிவானந்தம். அ அருளானந்தம், மா விஜயலட்சுமி

கரவெட்டி யார்க்கரு விநாயக வித்தியாசாலை- கி வசந்தராசன்.

நெல்லியடி மெ. மி. பாடசாலை- கி சுதாகரன் ஆ ஆனந்தேஸ்வரி, வே பாலகிருஷ்ணன்.

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலை: கா கலையழகன், சி இராசன் கதிரவேல் க சுசீலா, கா கருணாகரன் சி ராஜ்குமார் மு சிராளன்

புலோலி தெற்கு மெ மி பாடசாலை: க வசந்தன், சு ஆனந்தசிவம்.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி: கு இன்பராணி க பிரேமாவதி, ம சிவனேஸ்வரி.

பருத்தித்துறை பெண்கள் உயர்தர பாடசாலை: இ. திலகவதி மு பத்மாசனி ந குலராணி.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி சி கணேசநாதன் சி சிறிகாந்தராஜன், சி சிவபாதசுந்தரம்.

புலோலி ஆண்கள் ஆங்கில வித்தியாசாலை: ப தேவலிங்கம்

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலை: தி ஸ்ரீதர், ஆ கோமதி சோ சாந்தகுமார், பொ சிவகுமார். செ மோகனராஜ்.

உடுப்பிட்டி அ மி கல்லூரி சி சிற்சபேசன், இ சுஸ்வரலிங்கம்.

கம்பர்மலை அ த க பாடசாலை: கி பாஸ்கரதாஸ் இ ஞானசவுந்தரி, செ குகனேஸ்வரி, து சசிலேந்திர குமாரி.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை: இ அம்பிகைவ சிவபாதம்.

அச்சுவேலி ஸ்ரேசன் பாடசாலை: க சாரதாதேவி இ முத்துலட்சுமி.

ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாசாலை ப விமலேஸ்வரி

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக்கல்லூரி- ச ரவிச்சந்திரன்,

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி சி தயாபரன் சு பரமேஸ்வரி இ கமலேஸ்வரி

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை: க சிவயோகநாயகி, க இராசேஸ்வரி இ மல்லிகாதேவி.

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி: ப வசந்தா, செ பஞ்சரஞ்சிதம். கு ரேவதி.

ந இரவீந்திரன், பூ மோகனசந்திரன், செ

பாலகிருஷ்ணன். திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரி- சி அனுஷ்டன், மா யசோதரா, ஹ ஹம்சானந்தினி, சி சந்திரராசன்,

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வர வித்தியாசாலை- நா சந்திரவதினி.

இ மனோராமா, சு குமுதினி, க மங்களகுமாரி, சிவியாதெரு ஆனந்த வித்தியாசாலை - ச வனஜா, நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை - த சாந்தினி, க யோகராணி,

பா பூங்குன்றன், ந தயாவதி, க கலாராணி, க தனஞ்செயன். கனகரத்தினம் மகாவித்தியாலயம் - சி சற்குணேஸ்வரி, பொ சகுந்தலாதேவி, அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை - இ யசோதா, ச பாமா தேவி, செ இரஞ்சினிதேவி, சு ஸ்ரீ இராஜலிங்கம்.

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி - சி முருகதாஸ், ர தனேந்திரன் சி சுபேந்திரன், ஞா பாஸ்கரன், இ சிவகுமார். யோ அஜித்குமார், யோ ஜெயந்தா, ந நந்தகுமார்.

கொட்டடி நமசிவாய வித்தியாசாலை-நா உதயகுமாரி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி- ப சிவலிங்கம்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி- வை அம்பிகா, ஆ பரமேஸ்வரி, வ பவளராணி, ஆ பார்வதி,

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை- க விமலாதேவி, ந தயாளினி, இ பாமா, நா மகாலெட்சுமி, மா தேவபாலன், அ தனலட்சுமி.

உரும்பராய் இந்துக்கல்லூரி- மா பிரபாகரன், ஐ இரதிமனோகரி, பொ வசந்தவேணி

வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்- சி குருதேவி, மு சுசீலா, ஐ வைரசபூபதி

(தொடரும்)

## 8000 பேருக்கு உணவுபொருட்கள் விநியோகம்

நாவலப்பிட்டி, சனி

சுமார் எட்டாயிரம்பேர்களுக்கு சீனி, மிளகாய் மா, போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்கள்விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகல் பகிர்ந்தளிக்கப்பட்டது

நாவலப்பிட்டி நகரின் பிரபல வர்த்தகர்கள் மூவர் கடைகளில்உணவுப்பொருட்களை பதுக்கி வைத்துக் கொண்டு இருந்ததாகக் கிடைத்ததுப்பை அடுத்து நாவலப்பிட்டி பொசாரின் தலைமையில் உத்தியோகப் பற்றற்ற விலைக்கட்டுப் பாட்டு அதிகாரிகளான திரு. சரத்ஜயவர்த்தன திரு. கே. பி. சுமதிபால திரு. தர்மசேன ஆகியோர்களின் ஆதரவுடனும் நடந்த மேற்படி சம்பவத்தையடுத்து நகரின் ஏனைய கடைகளில் இருந்த ஏராளமான உணவுப் பொருட்களும் கட்டுப் பாட்டு விலைக்கே விற்கப்படுகின்றன.

மேற்படி சம்பவத்தை ஒலிபெருக்கி மூலம் அறிவித்ததைத் தொடர்ந்து ஏராளமான பொதுமக்கள் பயன்பெற்றனர் இச்சம்பவம் நடந்து கொண்டிருந்தவேளையில் நாவலப்பிட்டி எம். பி. திரு.எம்.எஸ். அலுத்கமகே கியூவரிசைகளில் நின்று பொருட்கள் வாங்கிய மக்களுக்கு ஒத்தாசை புரிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி. பாகிஸ்தானில் இடைக்கால அரசு ஏற்படுமா?

## ஷேக் முஜிபுர் ரஹ்மானுடன் யாஹ்யா தொடர்ந்து ஆலோசனை

டாக்கா, மார்ச் 20
கிழக்குப் பாகிஸ்தானில் அவாமி லீக் மற்றும் சிறு கட்சித் தலைவர்களையும் கொண்ட இடைக்கால சிவில் அரசாங்கம் ஒன்றினை அமைப்பது பற்றி ஷேக் முஜிபுர் ரஹ்மானுடன் அதிபர் யாஹ்யாகான் ஆலோசித்துவருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஆனல் இந்த யோசனைகளுக்கு இணங்க மேற்குப் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் பூட்டோ மறுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. கிழக்குப் பாகிஸ்தானை விற்பதற்குத் தாம் தயாராய் இல்லையென்று திரு பூட்டோ கருத்து வெளியிட்டுள்ளதாக ஒரு பத்திரிகை எழுதியுள்ளது

திரு. பூட்டோ சீனவுக்கு சார்பாகவும், இந்தியாவுடன் விரோதமாகவும் இருந்து வருகிருர். ஆனல் ஷேக் முஜிபுர் ரஹ்மான் ஜனநாயகவாதியாகவும் இருப்பதுடன் பாரதத்துடன் நேசமனப்பான்மையுடன் இருப்பதையும் விரும்புகிருர் என்று ஒரு பத்திரிகை எழுதியுள்ளது.

நேற்று டாக்காவுக்குச் சுமார் 22 மைல் தொலைவில் ஒரு நகரில் இராணுவத்துக்கும் பொதுமக்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் சுமார் 20 பேர்வரை கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறதாம்.

இந்தச் சம்பவம் குறித்து ஷேக் முஜிபுர் ரஹ்மான் கடும் ஆட்சேபம் தெரிவித்திருக்கிருர். இம்மாதிரிச் சம்பவங்கள் தொடர்ந்தால் அதிபர் யாஹ்யாகானுடன் நடத்தும் பேச்சுக்களை ரத்துச் செய்யவேண்டியேற்படுமென்று அவர் எச்சரிக்கை விடுத்திருக்கிருர்.

இராணுவ அதிகாரி வெளியூரிலிருந்து முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருக்கையில் மக்கள் கூட்டம் வழியை மறித்துக்கொண்டது என்றும், இதனல் ஏற்பட்ட மோதலில் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம்செய்ய நேர்ந்ததென்றும் அரசாங்கக் குறிப்பு கூறுகிறது.

## திரும்பிச் செல்வதில்லை ஈபான் உறுதி

வாஷிங்டன். 20
1967-ம் ஆண்டுக்கு முந்திய எல்லைகளுக்குத் திரும்பச்செல்வதில்லையென்ற கொள்கையைத் தனித்து நின்றே நிலைநிறுத்த இஸ்ரேல் உறுதிகொண்டிருப்பதாக அந்த நாட்டின் வெளிஉறவு அமைச்சர் திரு. அப்ரீ ஈபான் தெரிவித்திருக்கிருர்.

அமெரிக்கத் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்துவதற்காக அவர் இங்கு வந்திருக்கிருர்.

பேச்சுவார்த்தைகளுக்கான கதவு திறந்தே இருக்கிறது. ஆனல் இடையில் இதில் முட்டுச்கட்டை ஏற்பட்டுள்ளது என்ருர் அவர்.

மேற்காசியாவில் அமைதிப் படை நிறுவுவதற்கும் அவர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

## இன நல்லெண்ண வாரம்: பிரிட்டனில் கொண்டாட்டம்

லண்டன், மார்ச் 20
ஐ நா சபையின் இன சௌஜன்ய வருடத்தைமுன்னிட்டு பிரிட்டனிலுள்ள நியூகாஸின் 'இன நல்லெண்ணவாரம்' இப்பொழுது வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இங்கு வதியும் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த பல்வேறு இனமக்கள் ஒன்றுபடும் வாய்புகளை உண்டு பண்ணும் நோக்கமாகவே இந்நகரிலுள்ள இனஉறவுக் கவுன்சில் இந்த வைபவங்களை ஒழுங்கு செய்துள்ளது. ஆங்கில மக்கள் குடியேற்ற வாசிகளை நன்குபுரிந்து அவர்களது உரிமைகளைக் கௌரவிக்க வேண்டுமென்பதும் இந்தக் கொண்டாட்டங்களின் மற்ெருரு பிரதான நோக்கமாகும்.

பிரிட்டனிலுள்ள குடியேற்றவாசிகளின் நிலைமை பற்றி விளம்பரப்படங்கள், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் ஆகியனவற்றையும் இக்கொண்டாட்டங்களின் ஒரு அம்சமாக விளங்கும். நியூகாஸில் சர்வகலாசாலையில நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பிரிட்டனிலுள்ள கறுப்பு மக்கள் கூட்டணியின் தலைவரான திரு. ரோய்ஷோவ் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டார். இங்குள்ள ஐ நா சங்கம் ஒழுங்கு செய்யும் இன்ெருரு கூட்டத்தில் முன்னுள் ஐ நாவின் பிரிட்டிஷ் பிரதிநிதியான கராடன் பிரபு சொற்பொழிவாற்றுவார்.

சமூக வாழ்க்கையில் குடியேற்றவாசிகளின் பிரச்னைகளை எடுத்து விளக்கும் முழு நீள திரைப்படங்களும் இவ்வைபவங்களின்போது காண்பிக்கப்படுகின்றன.

இதேவேளை இங்குள்ள பாகிஸ்தான் இஸ்லாமியசங்கம் தனது நிர்வாகத்தின் கீழுள்ள பள்ளிவாசலுக்கு பொதுமக்கள் விஜயம் செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது. இங்குள்ள சீக்கிய, யூத சமூகத்தினரும் தத்தம் தேவாலயங்களுக்குள் பொதுமக்களை அனுமதித்து தமது மத அனுஷ்டானங்களைப்பற்றி விளக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு 8,000 தொன்கள் பிரிட்டிஷ் தண்டவாளங்கள்

லண்டன், மார்ச் 20
பிரிட்டனிடமிருந்து 8.000 தொன் எஃகு ரயில் தண்டவாளங்களை இலங்கை அரசாங்க ரயில்வே பெறவிருக்கிறது. வடகிழக்கு இங்கிலாந்திலுள்ள வேர்க்கிங்டன் பட்டினத்திலிருக்கும் பிரிட்டிஷ் எஃகு தொழிற்சாலையிலிருந்து இந்த ரயில் பாதைகள் இப்பொழுது கப்பல் மார்க்கமாக இலங்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன,

இந்தத் தண்டவாளங்களின் பெறுமதி 4,30000 பவுண்களாகும். இலங்கையின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள ரயில்பாதைகள் இப்புதிய தண்டவாளங்களைக் கொண்டு புதுப்பிக்கப்படவிருக்கின்றன.

இலங்கை அரசாங்க ரயில்வே நீண்டகாலமாகப் பிரிட்டனிடமிருந்தே ரயில் தண்டவாளங்களைப் பெற்று வந்திருக்கிறது. கடந்த 20 ஆண்டுகளுக்குள் மட்டும் பிரிட்டிஷ் எஃகு கூட்டுத்தாபனம் 70,000 தொன் தண்டவாளங்களையும் இணைப்புத் தகடுகளையும் இலங்கை அரசாங்க ரயில்வேக்கு வழங்கியுள்ளது.

### மைசூர் அரசியல் நிலைமை

## பிரஜா சோஷலிஸ்ட் கட்சியினரும் இந்திரா காங்கிரஸில் சேர்ந்தனர்

புதுடில்லி, மார்ச் 20
மைசூர் மாநிலத்தில் இந்திரா சார்புகாங்கிரஸ் கட்சியின் பலம் மேலும் கூடியிருக்கின்றது. பிரஜாசோஷலிஸ்ட் கட்சி சட்டசபை உறுப்பினர்களும் இந்திரா காங்கிரஸில் சேர்ந்துகொள்ள முடிவுசெய்திருப்பதால் அதன் பலம் 115 ஆக உயர்ந்துள்ளது.

ஏற்கனவே நிஜலிங்கப்பா காங்கிரஸைச் சேர்ந்த 20 எம். எல். ஏக்கள் இந்திரா காங்கிரஸில் சேர்ந்துள்ளார்கள். மேலும்பலர் சேர்ந்துகொள்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலைமையில் மாற்று அரசை அமைப்பதா சட்டசபையைக் கலைத்து இடைக்கால தேர்தலுக்கு ஏற்பாடு செய்வதா என்பது குறித்து இந்திரா காங்கிரஸ் இன்னமும் முடிவுசெய்யாமலிருந்துவருகின்றது.

நேற்று முன்னுள் முதலமைச்சர் திரு வீரேந்திர பாட்டீல் இல்லத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் நிஜலிங்கப்பா காங்கிரசுக்கு அவர் சரியான முறையில் வழிகாட்டவில்லையென்று சில உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினர்கள்,

திரு பாட்டீல் இந்தக் கூட்டத்தில் பேசுகையில் கட்சியிலிருந்து 34 பேர் விலகிக்கொண்டு விட்டார்கள் என்று தெரிவித்தார் இவர்களில் மேலும் பலர் இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கொள்ளக்கூடும் என்றும் அவர் சொன்னுர்.

### மேற்கு வங்கம்

மேற்கு வங்காளத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி அரசாங்கம் அமைப்பதற்கு ஆதரவு அளிப்பதுபற்றி பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியுடனும் திரு ஜெகஜீவன்ராமுடனும் பேச்சுக்கள் நடத்துவதற்காக வங்ஙகிளா காங்கிரஸ் தலைவர் திரு. அஜோய்குமார் முகர்ஜி விமானத்தில் புதுடில்லிக்குப் புறப்பட்டிருக்கின்ருர்.

இந்திரா காங்கிரஸ் அரசாங்கம் அமைப்பதற்கு முழு ஆதரவும் அளிப்பதென பங்கிளா காங்கிரஸ் ஏற்கனவே முடிவுசெய்திருக்கின்றது. இந்திரா காங்கிரஸ் கட்சி அமைக்கும் மந்திரிசபையில் பங்கிளா காங்கிரஸ் பங்கேற்கவேண்டும் என்ற உள்ளூர் இந்திரா காங்கிரஸ் காட்சித் தலைவர்கள் விடுத்த கோரிக்கையைத் திரு முகர்ஜி நிராகரித்திருக்கிருர்.

தமதுகட்சிக்கு சட்டசபையில் மிகக் குறைந்த ஸ்தானங்களே இருப்பதால் அவர் மந்திரி சபையில் பங்கேற்கும் யோசனையை நிராகரித்து விட்டதாகத் தெரிகின்றது.

மே. வங்காளத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி அரசாங்கம் அமைப்பதற்கு ஆதரவு திரட்டும் வகையில் அங்குள்ள மார்க்ஸிஸ்ட் அல்லாத ஏனைய கட்சிகளுடன் மத்திய தலைவர்கள் இன்று ஆலோசனைகள் நடத்திவருகிருர்கள்.

ஒரிஸாவில் இந்திரா காங்கிரஸ் கட்சி தனித்தே அரசாங்கம் அமைக்க உத்தேசித்திருப்பதாக மத்திய ஸ்ரேற் மந்திரி நந்தினி சத்பதி தெரிவித்திருக்கிருர்.

### கறுப்பர் நாடுகளுடன

## பேச்சுநடத்த தெ. ஆபிரிக்கா விருப்பம்

லண்டன், மார்ச் 20
ஆபிரிக்கநாடுகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தத்தயாராய் இருப்பதாக தென்னுபிரிக்க முதலமைச்சர் வொஸ்டர் அறிவித்திருக்கிருர்.

தென்னுபிரிக்காவுக்கும் ஆபிரிக்கநாடுகளுக்குமிடையிலான பொதுவான விஷயங்கள்பற்றி பேச்சு வார்த்தைகளில் இந்த நாடுகள் ஈடுபடலாமென ஆறுமாதங்களுக்கு முன்னர் ஐவரிகோஸ்ட் அதிபர் [illegible] வித்திருந்தார்.


## ஆசிரியர் பற்றுக்குறை

திருக்கோணமலை, சனி
திருக்கோணமலை, மூதூர் தொகுதிகளில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் இக்குறையைப்போக்க 283 ஆசிரியர்கள் உடனடியாகத் தேவை எனவும் பெற்ருர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சுக்குத் தெரிவித்துள்ளது.

## வள்ளம்கட்டும் தொழிற்சாலை

கோட்டை, சனி
தெல்துவரவில் மீன்பிடி வள்ளங்களைகட்டும்தொழிற்சாலையொன்றை நிறுவ கடற்றெழில் அமைச்சு நடவடிக்கைகள் மேற்கொண்டுவருகிறது

இம்மீன்பிடி வள்ளங்களை இப்பகுதியில் கட்டுவதால் இங்குள்ள கடற்றெழிலாளர் மத்தியில்வேலையில்லாப் பிரச்னை நீங்குவதோடுநாட்டின் இதரபகுதிகளிலுள்ள கடற்றெழிலாளர்களுக்கும் வள்ளங்களை [illegible] பாடின்றிப் பெறுவதற்கு [illegible]

SONY
2R-29

ஸோனி பாக்கெட் ட்ரான்சிஸ்டர் ரேடியோ
சிடில்ஸ் சினிரேடியோ
9, 10, கொன்சிஸ்டரி கட்டிடம்,
பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.
தொலைபேசி 27311
கிளைகள்: கண்டி, யாழ்ப்பாணம், கம்பஹா, அம்பலாந்தோட்டை, பம்பலப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி வாக்கு

பெண்கள் முன்னேற்றம் அடைந்தால், அவர்களுடைய மக்கள் தங்கள் சீரிய செயல்களால் நாட்டின் பெயரை ஒளிரச் செய்வார்கள். அப்போது நாட்டின் கலையும் அறிவும், சக்தியும் தியானமும் விழித்தெழும். — விவேகானந்தர்.


# ஈழநாடு

Ee'anadu National Tamil Daily
Teiegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம் 7ந் திகதி ( 21 - 3 - 71)


## போதனை மட்டும் போதாது

போதனையால் மட்டும் சோஷலிஸத்தை அடைந்துவிடமுடியாதென்றும் சோஷலிஸம் சோஷலிஸம் என்று சொல்லிக் கொண்டிருப்பதால் பயனில்லையென்றும் சாதனை மூலம் இதைச் சாதிப்பதற்கு தலைவர்கள் ஏழை எளிய மக்களுடன் சேர்ந்து உழைக்கவேண்டும் என்றும் திஸ்ஸமகாராமைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ரென்னிசன் எதிரிசூரிய சிரமதான வைபவமொன்றில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்திருக்கிறார். அவரது அபிப்பிராயத்தில் தவறு சொல்ல இடமில்லை.

சோஷலிஸம் என்ற வார்த்தையை இன்று உபயோகிக்காவிட்டால் அல்லது உபயோகிப்பதற்கு யாராவது மறந்துவிட்டால் அவர்கள் யாவரும் பழமைபோக்குவாதிகள் என்று நாமம் சூட்டப்படும் காலம் இது எல்லோருமே சோஷலிஸம் பற்றிப் பேசுகிறார்கள் இதனால் சோஷலிஸம் என்றால் என்ன, உண்மையான சோஷலிஸம் எது என்ற சந்தேகம் மக்கள் மனதில் எழுந்துள்ளது. ஜனநாயக சோஷலிஸம் என்று பேசுவதில் அர்த்தமில்லையென்றும் ஜனநாயகமும் சோஷலிஸமும் ஒன்றுசேர முடியாதென்றும் சிலர் கூறுகின்றனர். இதேசமயம் சோஷலிஸம் பற்றி வியாக்கியானம் செய்பவர்கள் பலர் அவர்களும் இடத்துக்கிடம் நேரத்துக்கு நேரம் ஒவ்வொன்று கூறுகிறார்கள் இது வேறு மக்களுக்குச் சோஷலிஸம் பற்றி மயக்கம் ஏற்படுத்துகின்றது

சோஷலிஸத்தை வாழ்க்கையின் நடைமுறையில் கடைப்பிடிப்பவர்களை செயல் படுத்துபவர்களைவிட சோஷலிஸம் பற்றி பேசுபவர்களே நமது நாட்டில் அதிகரித்துள்ளனர்

பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களைப் பின்பற்றும் மக்கள் இந் நாட்டில் வாழ்கின்றபோதிலும் கொலை, களவு மற்றும் குற்றச்செயல்கள் இங்கு அதிகரித்து வருவதற்கு என்ன காரணம்? சமயம் பற்றி பேசுபவர்களும் அறிக்கைகள், மகஜர்கள் சமர்ப்பிப்பவர்களும் போதனை செய்பவர்களும் அதிகரித்து வருவதும் சமயத்தை, சமயக்கொள்கை கோட்பாடுகளை அனுஷ்டிக்காமல், கடைப்பிடிக்காமல் விடுவதுமே இதற்குக் காரணமாகும்

இதேபோன்றுதான் சோஷலிஸம் பற்றிப் பேசுபவர்களால் சோஷலிஸத்துக்கோ மக்களுக்கோ, நாட்டுக்கோ எதுவித நன்மையும் கிடைக்கமுடியாது.

சோஷலிஸம் என்றால் சமத்துவம் என்றுதான் அர்த்தம் கூறப்படுகிறது. சமத்துவம் என்றால் எங்கும் எதிலும் சமத்துவம் என்பதாகும். இதில் பாகுபாடு வேறுபாடு காண்பிக்கப்பட்டால் அல்லது பாகுபாடுகளுக்கும் வேறுபாடுகளுக்கும் இடமளிக்கப்பட்டால் உண்மையான சோஷலிஸம் மலரமுடியாது.

எனவே இல்லமகாராமைப் பிரதிநிதி கூறுவதில் அர்த்தம் இருப்பதை சோஷலிஸம் பேசுபவர்கள்—அவர்கள் என்ன காரணத்துக்காகப் பேசினாலும்— உணர்ந்து சோஷலிஸத்தைச் செயற்படுத்த முன்வரவேண்டியது அவசியமாகிவிட்டது.

அமெரிக்க தூதரகத்தாக்குதல்

## சந்தேகநபர் அடையாளம் காட்டப்படவில்லை

கோட்டை, சனி

அமெரிக்க தூதரகத் தாக்குதல் சம்பந்தமாக கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த 7 பேரையும் அடையாளம் காட்ட சாட்சிகள் தவறிவிட்டனர்

கொழும்பு பதில் மாஜிஸ்திரேட் திரு அன்றூ டீ சில்வா முன்னிலையில் இந்த அடையாள அணிவகுப்பு நடந்தது

ரி. என். சொலமன் பெருமாள் சண்முகம் அன்ரனி சேவையர் எஸ் சச்சிதானந்தர் பி. ஏ. ராஜரட்ண வித்தியாகார குலசிங்கா பிரேமதாசா குலதுங்கா ஆகியோரே சந்தேகநபர்களாவர் ஒருவர் பொக்களிப்பான் சுகயீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சதிர்சிங்கா, டி எம் எம் பேட் ஆகியோரே அடையாளம் காட்டத்தவறிய சாட்சிகளாகும். அடையாள அணிவகுப்பின்பின்னர் சந்தேகநபர்கள் கோட்டை மாஜிஸ்திரேட் திரு சமசிங்கா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களான அன்ரனி சேவையர், எஸ் சச்சிதானந்தா, பி ஏ ராஜரத்தினு. வித்தியாகார குலசிங்கம் ஆகியோரை ஏப்ரல் 3-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார் ரி என் சொலமன். பெருமாள் சண்முகம், பிரேமதசா குலதுங்க ஆகியோர் 500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

......

## மாணவர் நிலையம்

கோட்டை, சனி

மாணவர்கள் தாங்கள் சமூக கலாச்சார விடயங்கள் மற்றும் நன்மைபயக்கக் கூடிய பல அலுவல்களையும் கற்று அவற்றை வளர்க்க விரைவில் சகல சக்திகளோடும் கூடிய ஒரு நிலையமொன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படவிருக்கிறது எனப் பேராசிரியர் ஏ. டி. பி. ஜயதிலகா தெரிவித்துள்ளார்.

புதன் கிழமையன்று மாணவர் நிலையம் ஒன்றுக்கான கட்டிடத்தைத்திறந்துவைத்துப் பேசுகையில் பேராசிரியர் திரு ஜயதிலகா மேற்கண்டவாறு கூறினார்.

# அரசியல் நிர்ணய சபை[illegible]

# சமஷ்டி பற்றிய விவா[illegible]

இலங்கையின் எதிர்கால அரசியல் தலைவிதியை நமது எம் பி.மார்கள் விவாதித்து முடிவுசெய்துவருகிறார்கள் அல்லவா! அதை நேரில் பார்க்கவேண்டும் என்ற ஆவலுடன் சென்ற வாரம் பார்லிமென்ட் சபைக்குச் சென்றிருந்தேன். அரசியல் நிர்ணயசபை என்று அதற்குப் பெயர் மாற்றியிருந்தாலும் பார்லிமெண்ட் சபைக்கும், அதற்கும் வித்தியாசம் எதையும் காணவில்லை.

அன்று உடுவில் பிரதிநிதி தர்மலிங்கம் அவர்கள், சமஷ்டி அரசியல் வேண்டுமென்ற பிரேரணையைக் கொண்டுவந்து பேசுவதால் கூட்டம் அதிகமிருக்கும் என்று நினைத்தேன். ஆனால் கூட்டம் மிகக் குறைவு. நுழை வாயிலில் 'பாஸ்' கொடுக்கும் இடத்தில் கண்ட ஒரு காட்சி எனக்கு மிக மகிழ்ச்சி அளித்தது. என்ன தெரியுமா? அங்கு இரு அன்பர்கள் 'ஈழநாடு' பத்திரிகையை வைத்து. செனேட்டர் நடேசன் அவர்கள் எழுதிய அரசியல் கட்டுரையை மிகக் கவனமாகப் படித்துக் கொண்டிருந்தார்கள். பேப்பர்காரனுக்கு மிக மிக மகிழ்ச்சி அளிக்கும் காட்சி, தன் பத்திரிகையைப் பொதுமக்கள் படிப்பதுதான். பயனுள்ள விஷயம் இருந்தால்தானே படிப்பார்கள். அதுவும் பார்லிமெண்ட் கட்டிடத்தில் பலர் முன்னிலையிலும் படிப்பதென்றால், அதைப் பற்றி மகிழ்ச்சி மட்டுமல்ல, பெருமையும் அடைய நியாயம் உண்டுதானே.

என்றுமே இல்லாதபடி பார்லிமெண்ட் சபையின் உள்ளும் புறமும் பொலிஸும், இராணுவமும் சேர்ந்து காவல்புரிந்ததைக் கண்டேன். இராணுவச் சிப்பாய்களிடம் துப்பாக்கிகள் இல்லை. என்றாலும் நிலைமை குறித்து அரசாங்கம் ஏதோ கவலை கொண்டிருப்பதால் தானே இவ்வளவு பலத்த காவல் போட்டிருக்கவேண்டும். நாட்டில் பல வெடிகுண்டுச் சம்பவங்கள் ஏற்பட்டிருப்பதை உணர்ந்து, அரசாங்கம் முன் ஜாக்கிரதையாக இருப்பதில் வியப்பில்லை. எந்தச் சமயமும் எதுவும் ஏற்படலாம் அல்லவா?

கட்சி முறையில் எல்லோரும் பேசுவதாயின் சிறுபான்மை வகுப்பினர் அங்கு இருந்தும் பயனில்லை என்றும், கட்சி வேற்றுமைகளை மறந்து, எல்லா மெம்பர்களும் சுதந்திரமாகப் பேசினால்தான், விட்டுக்கொடுக்கத் தயாராக இருந்தால்தான், இந்த விஷயத்தில் பயனுண்டென்று முதல் நாளே தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ் ஜே வி. அவர்கள் கூறியிருந்தார்கள் ஆனாலும் அந்த விவாதமெல்லாம் கட்சி முறையில்தான் இருந்தன தமிழ்பேசும் மெம்பர்களுக்குள்ளாக வேற்றுமைகள் எழுந்தன என்றாலும், மற்ற எம். பி மார்கள் தமிழரைப் பொறுத்தவரை ஒரே பொதுவான கருத்தை கொண்டிருப்பதாகத் தோன்றியது'

தமிழரசுக்கட்சியின் மனப்பான்மையை [illegible] மாற்றக் [illegible] யிருந்தது. "சமஷ்டி அரசியல்யோசனையை முதல்முதலாகக் கூறியது காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகாதான். அவர் கூறிய அந்த யோசனையைத்தான் நாங்கள் இப்போது கேட்கிறோம். என்றாலும் உடனடியாகச் சமஷ்டி வேண்டும் என்றும்கேட்கவில்லை. அதை ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும் என்றும் சொல்லவில்லை. பின்னர் அவரே, பிரதேச சபை வேண்டும் என்றும் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்றும் கூறினார். அதையாவது இப்போது ஒப்புக்கொள்ளுங்கள் என்றார் அதிகாரத்தைப் பரவலாக்கவேண்டும் என்ற யோசனையைச் சபையிலுள்ள எல்லாக் கட்சியினரும் ஒவ்வொரு சமயம் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்'' என்றும் உடுவில் எம். பி. மிக நயமாக ஞாபகப்படுத்தினார். ஆனால் அவர் பேசுகையில் பலரும் குறுக்கிட்டு எழுப்பிய எதிர்ப்புக் குரல்களைக் கேட்டபோது, அரசாங்கக் கட்சியின் மனம் சிறிதும் மாறுவதற்கான அறிகுறி எதுவும் காணவில்லை. அவர்கள் ஏற்கனவே தயாரித்துள்ள அடிப்படைத் தீர்மானங்கள் அப்படியே நிறைவேறுமென்றும், திருத்தங்கள் எதுவும் ஒப்புக்கொள்ளப்படுவது சந்தேகமென்றும் பட்டது

உடுவில் தர்மலிங்கத்தார் தமது கட்சியை விரிவாகவும் ஆணித்தரமாகவும் எடுத்துச் சொன்னார். உலகில் உள்ள சோஷலிஸ நாடுகளில் சமஷ்டி முறையே இருந்து வருவதாயும் சுட்டிக்காட்டினார். ஆனால் சமஷ்டிமுறை அமெரிக்கா. இந்தியா முதலிய நாடுகளிலும் இருப்பதாயும், சோஷலிஸ நாடுகளின் முன்னேற்றத்திற்கு உண்மையில் சோஷலிஸமே காரணமேயன்றிச் சமஷ்டியல்லவென்றும் இலங்கை மிகச் சிறிய நாடாதலால் ஒற்றை ஆட்சியே மேலானதென்றும் அரசாங்கக் கட்சியின் சார்பாகத் தெரிவிக்கப்பட்டது.

கண்டியர்களும் தங்கள் இரு மாகாணங்களுக்கும் சமஷ்டி அரசியல் வேண்டுமென்று ஒருசமயம் கேட்டார்கள் என்பது உடுவில் பிரதிநிதி ஞாபகப்படுத்திய போது அது 1926-ம் வருடத்திலென்றும் 40 வருடங்களுக்கு மேல் உடுவில் பிரதிநிதி பின்தங்கி இருப்பதாயும் கவர்னர் ஜெனரல் பிரதமர் முதலிய பலரும் கண்டியர்களே என்றும் ஓர் அரசாங்கக்கட்சி மெம்பர் குறுக்கிட்டுச் சொன்னார். உடன் சற்றும் தயங்காமல் இவர்களுக்கெல்லாம் பெரிய பதவிகள் கிடைத்துவிட்ட காரணத்தால் அவர்கள் மனம் மாறிவிட்டது போலும் என்று கருத்துப்பட பதிலளித்தார் உடுவில் எம் பி.

முன்னாள் பிரதமர் பண்டாரநாயகாவின் கொள்கையைப் பின்பற்றி அதை நிறைவேற்றப் போவதாக கூறும் பிரதமர் ஸ்ரீமாவோவும் அவரது கட்சியினரும் அவரது கொள்கைகளைப் பின்பற்ற இது நல்ல தருணம் என்றும் சில தீவிரவாதிகள் எதிர்த்ததாலேயே அவர் தமது கொள்கைகளை தம் விருப்பப்படி நிறைவேற்ற முடியாது போயிற்றென்றும் அவருக்கு பார்லிமெண்டில் பலம் இருந்தும் அவர் தமிழரசுக்கட்சியினருடன் ஒப்பந்தம் செய்து கொண்டதற்குக் காரணம் நாட்டிலே அமைதியும், தேசிய ஒற்றுமையும் ஏற்பட்டால்தான் முன்னேற்றம் ஏற்படுமென்பதை அவர் உணர்ந்ததாகவும் தர்மலிங்கத்தார் வலியுறுத்திக் கூறியபோது யாரும் அதை மறுத்து ஒரு குரலும் எழுப்பவில்லை.

ஆனால் நியமன மெம்பரான எம். ஸி. சுப்பிரமணியம் அவர்கள் கடைசியாக எழுந்து பேசியபோது தமிழரசுக்கட்சியினர் முகம் வாடியது. அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா உள்ளிட்டு அரசாங்கக் கட்சியினர் எல்லாம் மிக உற்சாகத்துடன் சந்தோஷ ஆரவாரங்கள் செய்தனர். கட்டுநாயக்கா, திருக்கோணமலைத் தளங்களை, பிரதமர் பண்டாரநாயக்கா பிரிட்டனிடம் திருப்பிக் கேட்டபோது அதற்கு மாறாகத் தமிழரசுக்கட்சியினர் வாக்களித்தனர் என்றும்

**ஐயாறன் எழுதுவது**

கல்விச்சாலைகளை அரசாங்கம் கையேற்றதை அக்கட்சியினர் எதிர்த்தனரென்றும் அவர்கள் இப்போது சோஷலிசம் பேசுவது அர்த்தமென்றும் எம் ஸி, அவர்கள் எடுத்துக்கூறியபோது, அரசாங்

# ஐந்தாண்டுத் திட்ட மு[illegible]

# பாதையில் சோ[illegible]

சோவியத்கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது காங்கிரஸின் தாக்கீதுகளின் படி புதிய ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பண்ணைப்பொருட்களின் சராசரி உற்பத்தியை 20-22 விகிதத்தால் அதிகரிப்பது உணவுப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு மக்களின் தேவைகளையும் கைத்தொழிலுக்கான மூலப் பொருட்களின் தேவைகளையும் பூர்த்தி செய்வதுமான பணிகள் மேற்கொள்ளப்படும்.

விவசாய அபிவிருத்தித் திட்டத்தில் தானிய உற்பத்தியின் வளர்சி மிக முக்கியமானது. தானிய உற்பத்தியின் வளர்ச்சி சராசரி 1950 லட்சம் தொன்னுக்குக் குறைவில்லாது இருக்க வேண்டும் பருத்தி கரும்பு சூரியகாந்தி விதை உருளைக்கிழங்கு மரக்கறி வகைகளின் உற்பத்தியும் அதிகரிக்கப்படும். இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும்மாமிசப் பொருட்களின் உற்பத்தி குறைந்தது 143 லட்சம் தொன்களாகவும் பாலுணவு உற்பத்தி 92 லட்சம் தொன்களாகவும் முட்டைகளின் உற்பத்தி 46700 கோடி தொன்களாகவும் உரோமம் உற்பத்தி 464000 தொன்களாகவும்அதிகரிக்கப்படும்.

விவசாயப் பொருட்களும் தொழில் நுட்பப் பொருட்களும் பௌதீகப் பொருட்களும் அதிகரிக்கப்படுவதைப் போலவேகால்நடைப் பண்ணைகளின் வளர்ச்சியும் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

விவசாய அபிவிருத்திக்காகவும் கட்டிட நிர்மாணத்திற்காகவும் வீடமைப்பு கலாச்சார நிறுவனங்களுக்காவும் யந்திர உற்பத்திக்காகவும் 8220 கோடி ரூபாயில் முதலீடு செய்யப்பட்டுள்ளன

விவசாய வேலைகளுக்கான யந்திர உபகரணங்களை அதிகரிக்க இருப்பதில் 1971-1975க்கான ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுப் பண்ணைகளும் அரசாங்கப் பண்ணைகளும் மேலும் பல யந்திர சாதனங்களைப் பெற உள்ளன.

விவசாய உற்பத்தியிலும் மாமிச உணவு உற்பத்தியிலும் மேலும் பல அபிவிருத்திகள் செய்யப்பட உள்ளன இவை அனைத்தும் விஞ்ஞான தொழில் நுட்ப முறைகளையும் சாதனங்களையும் விரிவான அடிப்படையில் கையாள்வதனால் இந்த வளர்ச்சியைப் பெறமுடியும் விவசாயத் திட்டங்களை ரசாயனவியலாக்குவதன் மூலம் விவசாய உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய முடியும் சென்ற சிலவருடங்களாக விவசாயத்துறையில் கனிஜப் பொருட்களைப்பாவித்ததின் மூலம் சோவியத் ரசாயனவியல் நிலையம் பெரும் வெற்றி கண்டுள்ளது.

1975ல் கனிஜ உரப் பொருட்களை விவசாய உற்பத்திக்குப் பாவிப்பதன் மூலம் விளைச்சல் 720 லட்சம் தொன்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. நடப்பு ஐந்தாண்டுத் திட்டம், பண்ணை நிலங்களிலும், விவசாயத் துறையிலும் பெரும் அபிவிருத்தியைக் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கலாம்.

ஐக்கிய சோவியத் சோஷலிஸக் குடியரசில் பெருவாரியான விவசாய நிலங்கள் கடுமையான சுவாத்தியங்களினால் பாதிக்கப்பட்டுள்ளன. வரப்போகும் ஐந்தாண்டுகளில் 3,000,000 ஹெக்டர் நிலங்கள் புதிதாகச் சாகுபடி செய்யப்பட

இந்திய லோக ச[illegible]

# தாயும்

## 3 தம்பதிகள்

புதுடில்லி, மார்ச் 20

புதிய லோகசபைக்கு ஒரு தாயும் மகனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மத்திய பிரதேசத்தில் பிந்த் தொகுதியில் குவாலியர் ராஜமாதா விஜயராஜே சிந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

குணா தொகுதியில் அவரது மகனும் குவாலியர் மகாராஜாவுமான மாதவராவ் சிந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இருவரும் ஜனசங்கத்தைச் சேர்ந்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...சபையில் ...விவாதம்!

...டுநாயக்கா, திருக் ...த் தளங்களை, ...பண்டாரநாயக்கா ...டம் திருப்பிக் ...து அதற்கு மாறு ...ழரசுக்கட்சியினர் ...னர் என்றும்

...லைகளை அரசாங் ...பற்றுதை அக்கட்சி ...நிர்த்தனரென்றும் ...இப்போது சோஷ ...சுவது அர்த்தமென் ...ஸி, அவர்களெடுத் ...போது. அரசாங்

கக் கட்சியினர் பெரும் ஆர வாரம் செய்தனர். கூட்டம் முடிந்தபோது அவரைப் பல மெம்பர்களும் பாராட்டி நன்றி தெரிவித்தனர்.

சபையில் இந்த விடயம் பற்றி நடைபெறும் விவா தம் மிக முக்கியமானதென் றும் கண்ணியமான முறை யில் இதை நடத்தி ஒவ்வொ ருவர் கூறுவதையும் கவன மாகக் கேட்கவேண்டுமென் றும்ஒரு சமயம் அமைச் சர் கொல்வின் கேட் டுக்கொண்டார். பத்து நாட்கள் கழித்துச் சபை கூடுகையில் இதுபற்றித் தமி ழரசுக்கட்சியினர் மேலும் என்ன பேசப்போகிறார்கள் என்பது ஆவலுடன் எதிர் பார்க்கப்படுகிறது.

# ...ட்ட முன்னேற்றப் ...சோவியத்!

...லும் பல அபிவிருத் ...ய்யப்பட உள்ள ...னத்தும் விஞ்ஞான ...நுட்ப முறைகளை ...னங்களையும் விரி ... அடிப்படையில் ...வதனால் இந்த ...மையைப் பெறமுடியும் ...ந் திட்டங்களை ...வியலாக்குவதன் ... விவசாய உற்பத் ...அதிகரிக்கச் செய்ய ...சென்ற சிலவருடங் ...விவசாயத்துறையில் ... பொருட்களைப்பா ... மூலம் சோவியத் ...வியல் நிலையம் ...வெற்றி கண்... ...னிஜ உரப் ...களை விவசாய உற் ...ப் பாவிப்பதன் ...ளைச்சல் 720 லட் ...ன்களாக இருக்கும் ...எதிர்பார்க்கப் படுகி ...டப்பு ஐந்தாண்டுத் ... பண்ணை நிலங்களி ...விவசாயத் துறையி ...படும் அபிவிருத்தி ...ாண்டுவரும் என்று ...ர்க்கலாம். ...சோவியத் சோஷ ...டியரசில் பெருவாரி ...விவசாய நிலங்கள் ...ான சுவாத்தியங் ... பாதிக்கப்பட்டுள் ... வரப்போகும் ஐந் ...களில் 3,000,000 ...ர் நிலங்கள் புதிதா ...படி செய்யப்பட

இருக்கின்றன; 4120 லட்சம் ஹெக்டர் நிலங்கள், நீர்ப் பாசன வசதிகளுக்காக ஒதுக் கப்பட்டுள்ளன. 5,000,000 ஹெக்டர் நிலங்களில் மிக ஈரலிப்பான 3,000,000 ஹெக்டர் நிலங்கள் நீர்வடி கால் திட்டத்துக்குள்ளாக் கப் படுவதினால், அதிக விளைச்சலைத் தரும் என்று எதிர்பார்க்கலாம்.

விவசாய உற்பத்தியைத் துரிதப்படுத்துவதற்குப் பொருளாதாரப் பகுதிகளை இயற்கைப் பிராந்தியங்க ளாகப் புனரமைப்பதும், உற்பத்தியை ஒரு முனைப் படுத்துவதும் படிப்படியாக தொழில் துறைக்கு மாற்று வதும் அவசியமாகிறது. கட ந்த ஐந்தாண்டுகளில் மாமி சப் பொருட்களினதும் கமத் தொழிற் பொருட்களினதும் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள் ளது மிருக உணவு உற்பத்தி நிலையம் ஒன்றும் நிர்மாணிக் கப்படும்.

(1971-75சோவியத் புதிய ஐந்தாண்டுத் திட்டத்தில் சோவியத் கூட்டுப்பண்ணை களினதும், அரசாங்கப் பண்ணைகளினதும் வளர்ச்சி யின் அபிவிருத்தி குறித்து சோ. க. க. வின் மத்திய கமிட்டிப் பத்திரிகையான "எக்கோனு மிச்செஸ் கா யா கஸட்டா"வில் ஐ சோ சோ. கு வினது விவசாய அமைச் சர் எழுதியுள்ள கட்டுரை யின் சுருக்கம்.)

## ...ய லோக சபையில்

# ...யும் மகனும்

## ...தம்பதிகள் தோற்றனர்

புதுடில்லி, மார்ச் 20 ...லோகசபைக்கு ஒரு ...மகனும் தேர்ந் ...கப்பட்டுள்ளனர். ...ய பிரதேசத்தில் ...தொகுதியில் குவா ...ஜமாதா விஜயராஜே ...ர் தேர்ந்தெடுக்கப் ...ளார். ...தொகுதியில் அவரது ...் குவாலியர் மகா ...புமான ராதவராஜ ...ர் தேர்ந்தெடுக்கப் ...ளனர். ...வரும் ஜனசங்கத்தை ...ர்கள்.

கலைக்கப்பட்ட லோகசபை யில் அங்கம் வகித்த 3 தம் பதிகள் புதிய லோகசபை யில் இருக்கமாட்டார்கள்.

கலைக்கப்பட்ட லோக சபையில் 3 தம்பதிகள் இருந் தனர். ஜே. பி. கிருபளானி யும் அவரது மனைவி சுசேதா வும் இருந்தனர். இவர்கள் இருவரில் கணவன் தேர்த லில் நிற்கவில்லை. சுசேதா தோற்றுப்போய் விட்டார். மற்றொரு தம்பதிகள் இடது கம்யூனிஸ்ட் தலைவர் ஏ கே கோபாலனும் அவரது மனைவி சுசீலாவும் கோபா

லன் வெற்றி பெற்றார் ஆனால் சுசீலா தோற்று விட் டார் மூன்றாவது தம்பதிக ளான கே. கே நய்யாரும் அவரது மனைவி சகுந்தலா நய்யாரும் இவர்களில் கே கே. நய்யார் தோற்றார் சகுந்தலா நய்யார் வெற்றி பெற்றார்.

பீகார் மாநிலத்தில் 4 லோகசபைத் தொகுதி களில் ஓட்டுப்போட்ட மக் கள் அனைவரும் தங்கள் ஓட் டுக்களை சரியாகப் போட் டிருக்கின்றனர். இத் தொகுதிகளில் ஒரு ஓட்டுக் கூட செல்லாத ஓட்டு இல்லை இப்படி இருந்தது இதுவே முதல் தடவையாகும்.

பகாதெகுதியில் 191683 வாக்குகள் பதிவாயின. எல் லாமே செல்லுபடியான ஓட் டுக்கள். ...காவில் 374320 ஓட்டுக்கள் பதிவாயின.

# தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடன் ஒத்துழைப்பு!

## புதிய கட்சியின் நோக்கம்

அரியாலை, ஞாயிறு

"பிரதேச சுயாட்சிதான் நன்மைதரும் இதன் மூலம் தமிழர் தமது கலை கலாச்சா ரங்களை பாதுகாக்கமுடியும். பிரதேச சுயாட்சி சிங்கள மக்களின் ஆதரவுடன் அமைக்கவேண்டும். இதை அடிப்படையாகக்கொண்டு புதிய கட்சி ஒன்று புதிய அர சியல்திட்டம் அமைக்கப்பட் டதும் கட்சி அங்குரார்ப் பணம் செய்யப்படும் என புதிய கட்சியின் அமைப்பா ளர் அறிக்கை ஒன்றில் கூறி யுள்ளார். புதிய கட்சியான தமிழர் சோஷலிஸ முன்ன ணியின் அமைப்பாளர் அட் வக்கேட் கே வி எஸ் சண்முக நாதன் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதா வது.

"தென் இலங்கையில் இருக் கும் சோஷலிஸ கொள்கை உள்ள முற்போக்கு கட்சிகளு டனும் சோஷலிஸ கொள் கையுள்ள முற்போக்குவாதி களுடன் சேர்ந்து ஒரு சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்கவேண்டும். இச் சோஷலிஸ அமைப்பின் கீழ்தான் கலை கலாச்சாரங் களை நாம் பாதுகாக்கமுடி யும். சிறுபான்மை மக்களா கிய எமது உரிமைகளைப் பெறவேண்டுமாயின் சிங்கள மக்களின் நல்லெண்ணத்து டனும் ஆதரவுடனும்தான் பெறலாம். ஆகவே இவர்க ளுடைய ஆதரவுடன் நாம் ஒரு பிரதேச சுயாட்சி ஒன்றை பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் கீழ் ஏற் படுத்தவேண்டும். இதுதான் தமிழ் மக்கள் நன்மை யடைய வழி.

பின்வரும் அம்சங்கள் கட் சியின் முக்கிய கோரிக்கை களாக இருக்கும்.

- கச்சேரி முறை ஒழித்து பிரதேசசபையிடம் கொடுத் தல்
- தீண்டாமையை ஒழித்து மக்கள் மத்தியில் சமரசம் ஏற்படுத்தல்.
- சீதனம் ஒழித்தல்.
- தொழிலாளர் நலன்.

# காசநோயாளர்களுக்கான புனர் வாழ்வு திட்டம் வெற்றி

கேரட்டை, சனி

சமூகசேவை அமைச்சு மேற்கொண்ட கச நோயா ளர்களுக்கான புனர்வாழ் வுத்திட்டம்பெரிதும்வெற்றி யளித்துள்ளது.

சிகிச்சை பெற்றுவந்த 240 பேருக்கு சமூகசேவை அமைச்சு உதவி அளித்து வந்தது.

சமூகசேவை ஊழியர்கள் நோயாளர்களின் வீடுகளுக் குச் சென்று அக்குடும்பங் களின் தனிப்பட்ட பிரச்னை களிலும் அக்கறை செலுத்தி தம்மாலான உதவிகளைநல்கி வந்துள்ளனர்.

## பிரயாணிகள் அவதி

அம்பன், சனி

நாகர் கோயில்பஸ்சேவை அடிக்கடி சீர்கேடடைவ தால் இப்பகுதிப் பிரயாணி கள் பெரிதும் கஷ்டமடை கின்றனர். நாகர் கோயி லுக்கு ஒரு பழைய பஸ் மாத்திரமே சேவைக்கு விடப்பட்டிருக்கின்றது இந்த பஸ் அடிக்கடி பழுதடைந்து விடுகின்றது. இந்த பஸ் பழுதடைந்தால் இதற்கு பதில் வேறு பஸ் விடப்படு வதில்லை. மந்திகைக்கு அருகிலுள்ள உபயகதிர் காமம் என்ற இடத்தில் நாகர் கோயில் பஸ்சேவை மாத்திரமே நடைபெறுகின் றது நாகர் கோயில் பஸ் சேவை இல்லாவிடில் இவ்வூர் மக்கள் நடந்தே பிரயாணம் செய்யவேண்டியகதி ஏற்படு கின்றது.

## பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியம்

கோப்பாய், சனி

"ஒரு பாடசாலையின் முன் னேற்றத்திற்கு பெற்றோர் மாணவர்களினதும்ஆசிரியர் களினதும் ஒத்துழைப்பு அவசியம். பாடசாலையின் ஆசிரியர்களைப் பெற்றோருக் கும், பெற்றோரை ஆசிரிய ருக்கும் தெரிந்திருக்க வேண்டியது அதிஅவசிய மானதொன்றாகும்."

மேற்கண்டவாறு கோப் பாய் மாவித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய வித்தியலய அதிபர் திரு. காசிநாதர் கூறினார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: 'ஒவ்வொருவரும் இவ்வித் தியாலயத்தைத் தமக்குச் சொந்தமானதாகக் கருதிச் செயலாற்றவேண்டுமென வும் அதிக மாணவர்களை மேலும்சேர்க்க இடவசதி உண்டென்றும் தெரிவித் தார் இக்கூட்டத்தில் எழு வரைக்கொண்ட இயக்க உபகுழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## நேசமனப்பான்மையை உருவாக்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

எமது பொழுதைப் பய னுள்ள முறையில் போக்க வேண்டும். நடனம் நாடகம் போன்றவற்றை நாம் கற் பது நமது சமுதாயத்திற்கு நல்லது.

மேற்கண்டவாறு பருத் தித்துறை நகரசபையின் முன்னாள் தலைவர் திரு நட ராசா ஒலிம்பிக் கழகத்தின ரால் ஒழுங்கு செய்யப் பட்ட விளையாட்டுப் போட் டிக்கு தலைமை தாங்கிஉரை யாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகை யில் தற்கால இளைஞர்களை தீயவழிகளில் செல்லாது தடுத்து நேச மனப்பான் மையை வளர்க்க விளையாட் டுக்கள் பெரிதும் உதவுகின் றன. மேலும் கிராமம் தோறும் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதி னால் உடல்நலமும் உளநல மும் பெறக்கூடியதாக அமை யும். இளைஞர் வளர்ச்சி யால் நாடும் வளர்ச்சியடை யும் என்றார்.

# வடக்கிலுள்ள இந்திய கோவில் காணிகள் பிரச்னே

பருத்தித்துறை, சனி

வடபகுதியில் சுமார் ஆறு இந்தியக் கோவில்களுக்குச் சொந்தமான 862 ஏக்கர் நெல்வயல்கள் இருப்பதாக வும், அவற்றின்மீது நெற் காணிச் சட்டப்படி வரி விதிக்கப்படுவ தில்லையென்றும் வடபகுதி விவசாய அதிகாரிஒருவர் தெரிவித்தார். இந்தியாவி லுள்ள திருவாவடுதுறை, திருவானைக்கா, சிதம்பரம், வேதாரணியம், இராமேஸ் வரம், திருவண்ணாமலை ஆகிய கோவில்களுக்கே இந் நெல்வயல்களின் வருமானம் போய்க்கொண்டிருந்தன. இவற்றைப்பற்றிய சட்டம் திருத்தப்பட விருப்பதாகத் தெரிகிறது இதுவரை மேற் படி கோவில் தலைமைப் பீடங்களால் நியமிக்கப்பட் டவர்களே இவ் வயல்களின் தர்மகர்த்தாக்களாகக் கடமையாற்றினர். இனி மேல், இப் பகுதிகளிலுள்ள பயிர்ச்செய்கைக் குழுக் களோ அன்றி இக்குழுக்க ளால் நியமிக்கப்படுபவர் களோ தர்மகர்த்தாக்களாக இருக்க வேண்டுமென இவ் வதிகாரி அபிப்பிராயம்தெரி வித்தார்.

# தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவு சங்கம் உதயம்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

கூட்டுறவுச் சமாசமூலம் பொதுமக்களுக்கு இதுவரை காலமும் விநியோகம் செய் யப்பட்டுவந்த உணவுப் பொருள்கள் புதிய தென்ம ராட்சி பலநோக்குக் கூட் டுறவுச் சங்கத்தால் கையேற் கப் பட்டுள்ளது.

வடபகுதி கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு வி. கனகசபை, திருவாளர்கள் செபஸ்ரியான், இராமநாதன், பெர்னண்டோ, விஜயநா தர், சிவரத்தினம் ஆகிய ஐவர் கொண்ட அதிகார சபையினரை நியமனம் செய்துள்ளார் பொது மக் களிலும் உதவியாணையாளர் நான்கு பேர்களை இவ்வாரம் நியமனம் செய்வார்.

தென்மராட்சியில் உள்ள 22 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகளும் இப் புன ரமைப்பால் பலனடையவுள் ளது. 'மிகவும் கவனமாகவும் பொது மக்களின் தேவை களை உடனுக்குடன் பூர்த்தி செய்யவும் எமது புதிய கூட் டுறவுச் சீரமைப்புத் திட் டம் பயன்தரும் ஒரு சங்கத் தில் இல்லாதபொருள் மற் றைய கடையில் விற்கவும் வசதியாக ஏற்ற ஒழுங்கு செய்யப்புதிய அதிகாரசபை பொறுப்பாக உள்ளது' என்று சம்பந்தப்பட்ட அதி காரியொருவர் தெரிவித் தார்.

இம்மாதம் 10ம் திகதி கையேற்ற தென்மராட்சிப் பலநோக்குக் கூட்டுறவுக் கடைதனது எல்லாக்கிளை களுக்கும் இவ்வாரம் உப்புத் தட்டுப்பாட்டின்றி விநி யோகம் செய்தது ஸ்ரீலங்கா வியாபாரக் கூட்டுத்தாப னம் உணவுப்பொருள்களை இவ்வாரம் தொடக்கம் நவீன முறையில் ஏற்றுமதி இறக்குமதியையும் ஒழுங்கு செய்துள்ளது. (கு வி ம)

## நாடக விழா

சுழிபுரம், சனி

"சன சமூக நிலையங்கள் நாடகம் விளையாட்டு போன்ற டயங்களில் ஈடு பட்டு முன்னேறுவதுபோல், சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் தீயகொடிய பழக் கங்களைக் களையவும், மற்ற வர்களுக்கு முன்னோடியாகத் திகழவும் முன்வரவேண்டும் நல்ல கருத்துக்களை, நாடக மூலம் பரப்புவது மிகவும் நன்மை பயப்பதாகும்" என்று சுழிபுரம் மேற்கு சன சமூக நிலையத்தினர் நடாத் திய நாடக விழாவுக்கு தலைமைவகித்து உரையாற் றிய சுழிபுரம் கிராம சபைத் தலைவர் திரு. சு. கந்தசாமி கூறினார்

மற்றும் பலரும் பேசினர் இரு நாடகங்கள் மேடை யேற்றப்பட்டன.

மற்றும் திரு நடராசதின சோதி, எஸ். கதிர்காமத் தம்பி ஆகியோர் உரையாற் றினார்கள். ஆண் அழகன் தெரிவும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

## விஞ்ஞானம் என்றால் என்ன?

யாழ்ப்பாணம், ஞாயிறு

அறிவைத் தொடர்ந்து முடிவு தெரியும்வரை ஆராய்ச்சிசெய்வது தான் விஞ்ஞானம் இதில் கோடிக் கணக்கான பணம் செல வானாலும் இதில் பெறும் பலன் விலைமதிக்க முடியாத தாகும்.

வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் பேராசிரியர் அ. சின்னத்தம்பி 'விஞ்ஞா னமும் நாமும்' என்னும் பொருள்பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ம. பரமானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பேராசிரியர் சின்னத்தம்பி மேலும் கூறி யதாவது: விஞ்ஞானம், அர சியல் வாழ்க்கை, சமய அறிவு, வரலாறு சம்பந்தப் பட்டதானும் விஞ்ஞானம் என்றதும் பௌதிக, வைத் திய துறைகளையே குறிப் பிடுவோம். இந்தவிஞ்ஞா னம் பற்றித்தான் ஆசிரியர் கள் எழுதுகின்றார்கள்.

தூயவிஞ்ஞான அறிவை மக்கள் அறியச்செய்யவேண் டும். தூயவிஞ்ஞான மூலம் பெற்ற அறிவை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தி வருகிறோம்.

திரு எஸ். யூ. சோமசேக ரம், திரு அ. சபாலிங்கம் ஆகியோரும் பேசினார்கள்.

பொருளாதாரத்தில்

# தன்னிறைவு வேண்டும்

மாவனெல்ல, சனி

ஒருநாடானது பொருளா தாரத்தில் தன்னிறைவு கொண்டதாகவும் வாழ்க் கைக்கு வேண்டிய பொருட் களுக்கு வேற்று நாடுகளின் மீது தங்கியிராமலும் இருத் தல்வேண்டும் இதற்கான முயற்சிகளைத் தற்போதைய அரசாங்கம் மேற்கொண் டுள்ளது. இதன்மூலம்தான் ஓர் சோசலிச அரசு நன்கு அமையமுடியும்"

உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி பி இலங்கரத்தின மாவனல்ல பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் நடை பெற்ற கூட்டத்தில் உரை யாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

திரு. பி ஆர் இரத்தி னயக்கா பேசுகையில் சோச லிசத்தை ஒரு குறுகியகால கட்டத்தில் அடையமுடியா தென்றும் ரஷ்யாவில்இதனை உருவாக்க சுமார் 50 வரு டங்கள் ஆயின என்றும் தெரிவித்தார்.

திரு. பி ஆர் சமரசிங்க, திரு ரி எம் மெனிக்டிவெல திரு ஆனந்தசிறிசேன, ஜனப் எம் கே எம் புகாரி உட்பட அநேகர் சொற் பொழிவாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘அருளால் தான் நூல்களின் உட்கருத்தை உணர்ந்து ஒழுகலாம்’

— கிரிதாரி பிரசாத்

மாவிட்டபுரம், சனி

திருக்குறள் உலகத்தை பற்றிக்காட்டும் நூலேதவிர தெய்வீகத்தை அடையும் வழியைக்காட்டும் நூல் அல்ல இந்தவழியைக்காட்டும் நூல் தான் திருவாசகம்’

இவ்வாறு காந்தியப்பேராசிரியர் திரு. நா. கிரிதாரி பிரசாத் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயமண்டபத்தில் நடந்த அருள்நெறி விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

மாவை அருள்நெறிமன்ற ஆதரவில் செ. து. ஜெயரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்:-

‘கற்றவர்கள் என்று சிலர் ஆணவம் கொள்கிறார்கள். ஆனால் அந்த ஆணவத்தை நீக்கி கடவுளிடம் சேர்க்கும் பொறுப்பை பழங்கால நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன. இப்படியான நூல்களை அறிவினால் பெறமுடியாது அருளால்தான் நூல்களின் உட்கருத்தை அறிந்து அதன்படி ஒழுகலாம்.

உலகிலுள்ள சகல நூல்களில் சிறந்தநூல் திருவாசகம்தான் இந்நூல் சகல நெறிகளையும் கடந்து கடவுளை அடையும் நெறியைக்காட்டும் பொக்கிஷமாக அமைந்துள்ளது. இந்நூலைப்பெற்றதற்காக நாம் பெருமையடைய வேண்டும். ஒவ்வொருவருடைய இல்லங்கள்தோறும் திருவாசகம் இடம் பெறவேண்டும். அதன்படி நடந்து நல்லநிலையை அடைய வேண்டும். இப்படியான நூலை தமிழ் மகன் எவரும் உலகறியச் செய்யவில்லை ஆங்கில மகன் போப் இந்நூலை மொழிபெயர்த்ததே இதன் உயர்கருத்துக்கு நல்ல சான்று. அவர்கள் அன்று செய்த பெரும் சேவையால் தான் இன்று திருவாசகம் உலகம் முழுவதும்பரவியுள்ளது. இதை நினைத்து சைவர்கள் பெருமையடையவேண்டும்என்றுகூறினார்,

நான் வைஷ்ணவ சமயத்தில் பிறந்தும் சைவத்தை வளர்த்து வருகிறேன் இந்தி பேசும் நாட்டில் பிறந்து தமிழுக்காகப் போராடி வருகிறேன், இது ஒற்றுமைப் பாட்டுக்கு உதவும் செயலாக அமையட்டும் என்பதற்காகவும், திருவாசகம் சைவசமயத்தில உள்ளதுஎன்பதாலுமேயாகும், திருவாசகம் தான் என்னை சைவத்தில் இழுத்தது என்பதைக் கூறும்போது பெருமையடைகிறேன்

தமிழ் நாட்டுக்கு தனிப் பெரும் சொத்து திருக்குறள், இதுபோல் சிறந்த நூல் ஒன்றும் இல்லை. மூளையால் உலகத்தை அறியக்கூடியதான நூல்தான் இது ஆனால் இதன்மூலம் தெய்வீகத்தை அடைய முடியாது. இந் நூல் மூலம் அன்று வள்ளுவர் விட்ட தொடரை பூர்த்திசெய்ய மாணிக்கவாசகர் தோன்றி தெய்வீகத்தை அடையும் வழியைக் காட்டும் நூலாகிய திருவாசகத்தை இயற்றி எமக்கு அளித்தார்.

சிதைவுறும் சமயத்தைக் கட்டிவளர்க்க உதவுவது தான் திருவாசகம். திருவாசகம் இல்லையென்றால் சமயம் இல்லை. பல ஜென்மம் எடுத்தாலும் இப்படியான சிறந்த நூலைப் பெற முடியாது இந்நூலைச் சகல மதப் பொது நூலாக மதிக்க வேண்டியது அவசியம்.

காலப்போக்கில் கல்லால் கட்டிய கோவில்கள் அழிந்து வருகின்றன. ஆனால் சொல்லால் கட்டிய நூல்கள் ஒருபோதும் அழியாது. இதற்கு உதாரணமாகத் திருவாசகம் போன்ற நூல்கள் வழங்கி வருகின்றன.” அருள் மா. குணபாலசிங்கம் நன்றிகூறினார்.

## இளைஞர் தற்கொலை

பருத்தித்துறை, சனி

அரசெட்டி மேற்கைச் சேர்ந்த கந்தசாமி சுப்பிரமணியம் வயது 22) என்னும் இளைஞர் தமது வீட்டு மாமரத்தில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் பிரேதமாகக் காணப்பட்டார். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ் சபாரத்தினம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## யாழ் புற்றுநோய் நிவாரண சங்கத்தின்கடந்த காலப்பணி

யாழ்ப்பாணம், ஞாயிறு

புற்றுநோய் சம்பந்தமான சுகாதாரக் கல்வியை ஊட்டி அது சம்பந்தமான ஆரம்ப அறிகுறிகளை விளக்கி, விரைவான சிகிச்சையை மேற்கொள்ளவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துவதே 1969ம் ஆண்டில் எமது முக்கிய பணியாக இருந்தது என்று இலங்கை புற்றுநோய் நிவாரணச்சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் தமது 1969 1970ம் ஆண்டு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

புற்றுநோய் சம்பந்தமான விரிவுரைகளை 24 பெரிய பாடசாலைகளில் நிகழ்த்தியதுடன் றொட்டரி கிளப், யாழ் சிறைச்சாலை போன்றவற்றிலும் இதுசம்பந்தமான விளக்கங்கள் 1969ம் ஆண்டில் வழங்கப்பட்டன. புற்றுநோய் சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் பாசாலைகள், அரசாங்க அலுவலகங்கள், கடைகள், வங்கிகள், பொதுமக்களுக்கு எமது சங்கம் விநியோகித்தது தொடர்ந்து இந்தப் பணியினை 1970ம் ஆண்டிலும் எமது சங்கம் செய்துவந்துள்ளது.

பொது மக்களிடமிருந்து நிதி சேகரிப்பது இரண்டாவது முக்கிய பணியாக இருந்துவருகிறது பொது மக்கள், வங்கிகள், ஸ்தாபனங்கள், அரசாங்க அலுவலகங்கள் ஆகியவற்றில் நிதி உதவிபெற்று நோயாளிகளுக்கு உதவிசெய்வதை எமது முக்கிய பணியாகச் செய்துவருகிறோம் 350 நோயாளிகள் எமது பட்டியலில் இருக்கிறார்கள். இவர்களில் அநேகமானவர்கள் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள். எமது சங்கத்திடம் விண்ணப்பிக்கும் கஷ்டப்பட்ட நோயாளிகளுக்கு 20 ரூபாயிலிருந்து 40 ரூபாய் வரை உதவிசெய்துவருகிறோம். சராசரி மாதம் 30 ரூபாய் உதவி வழங்கிவருகிறோம்.

கொழும்பிலுள்ள எமது தாய்ச்சங்கம் பல வருடங்களாக அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி பெற்றும், இலங்கை முழுவதிலுமுள்ள பொதுமக்களிடமிருந்து வருடம் ஒன்றரை லட்சம் ரூபாய் சேகரித்துவந்தபோதிலும் எமது பகுதி நோயாளிகளுக்கு ஒரு சிறு தொகையாவது கொடுத்து உதவவில்லை.

யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரியில் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையப்பிரிவு நிறுவ வேண்டியதன் அவசியத்தையும் அறிக்கை வற்புறுத்தியுள்ளது.

### புற்றுநோய் நிவாரண சங்க நிர்வாககள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை புற்றுநோய் நிவாரண சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்த கூட்டம் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் டாக்டர் கே கனகரத்தினம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு பொதுக் கூட்ட அறிக்கை வாசித்து சபையில் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

தலைவர் தமது அறிக்கையைச் சமர்ப்பித்தார். அறிக்கை தொடர்பாக கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சை நிலையமொன்றை நிறுவுவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதென்றும் கூடுதலான நிவாரணத்தைச் சேகரித்துக் கஷ்டப்படுபவர்களுக்கு மேலும் உதவி அளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## மண்டைதீவில் வலைத்திருட்டு

மண்டைதீவு, சனி

இம்மாதம் 25-ம் திகதிக்கு முன் மீன்பிடித் தொழிலாளர்கள் தமது வலைகளுக்கும் வள்ளங்களுக்கும் அரசாங்க முத்திரை பொறித்துக் கொள்ள வேண்டுமென்ற அரசாங்க உத்தரவைத் தொடர்ந்து மண்டைதீவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள பலரது வலைகள் திருட்டுப்போகின்றன மண்டைதீவு தெற்குக் கடற்கரையோரம் தொழில் செய்துவரும் யாழ்ப்பாணம் கரையூரைச்சேர்ந்த மீன்பிடியாளரின பல ஆயிரம்ரூபா பெறுமதியான [illegible] இங்கு திருட்டுப்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தியாகராஜர் உற்சவம் கொண்டாட முடிவு

அரியாலை, சனி

ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் உற்சவம் கொண்டாட வடஇலங்கைச்சங்கீத சபையின் செயற்குழு தீர்மானித்துள்ளது இம்மாதம் 29-ம் திகதி முதல் தொடர்ந்து ஐந்துதினங்கள் உற்சவத்தைக் கொண்டாடுவதென்றும் நாட்டின் எல்லாப் பகுதியிலிருந்தும் இசைக் கலைஞர்களை இவ்விழாவில் கலந்துகொள்ள அழைப்பதென்றும் சபை தீர்மானித்துள்ளது.

## புனருத்தாரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சின்னத்தம்பிப் புலவரால் கல்வளையந்தாதி பாடப் பெற்ற சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலயப் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுவருகின்றன. யாகமண்டபம், வசந்த மண்டபம் போன்றவை கட்டி [illegible] வாகனசாலை [illegible] வருகிறது.

## தரவைக் குளங்கள் புனரமைப்பு செய்யப்படும்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

உரும்பிராய், வசாவிளான், காங்கேசன்துறை ஆகிய இடங்களில் உள்ள தரவைக்குளங்கள் வழுக்கையாற்று நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன

நிலஅளவைப்பகுதி மூலம் சுமார் 30 நிலஅளவையாளர்கள் அப்பகுதியில் முதாமீட்டு வேலைக்குரிய அளவையில் ஈடுபட்டுவிட்டார்கள்

சுமார் 100 ஏக்கர் காணிகளில் உபஉணவுகளை இத்திட்டத்தால் அபிவிருத்தி செய்ய முடியுமென்று நம்பப்படுகிறது நீர்ப்பாசன பொறியியலாளர் அபிவிருத்திசபையின் கருத்துக்களைப் பரிசிலனை செய்து வழுக்கையாற்றுத் திட்ட நீர்ப்பாசன வடிகால்வாய்களை அரசாங்கம் அமைக்கவுள்ளது

தக்காளி வெண்காயம், நவதானியம் முதலியன அதிகம் பயிரிட தண்ணீர் போதியளவு எடுக்கவும் வடிகால்கள் கட்டப்படும்.

(கு வி ம)

## பலாலிக்கரையில் விரைவில் ஒரு புதிய பாடசாலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

பலாலிக்கரையில் ஒரு புதிய பாடசாலை உருவாகவிருக்கின்றது. அப்பகுதியில் வாழும் கடல்தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் சிறுபான்மைத் தமிழ் பிள்ளைகளும் படிப்பதற்காக இரண்டு மூன்று மைல்தூரம் செல்லவேண்டியிருந்தது. விரைவில் இக்குறை நீங்கவிருக்கின்றது.

இந்தப் பாடசாலைக்கான கட்டிடத்தை அப்பகுதி கடல் தொழிலாளா குடும்பங்களே கட்டி அரசாங்கத்திற்கு ஒப்படைக்கவிருக்கின்றன. இதற்கான அத்திவாரம் சமீபத்தில் ஆட்சிமன்ற சபாநாயகர் திரு. ஸ்ரான்லி திலகரத்தினுவால் நாட்டப்பட்டது.

காங்கேசன்துறைத் தொகுதி அபிவிருத்திசபைத் தலைவர் திரு. வ. பொன்னம்பலம் தலைமையில் சிரமதானமூலம் நிலம்துப்பரவாக்கப்பட்டது. கடற்கரைவான்கள் அகற்றப்பட்டு 200 யார் நீளமானபாதை ஒன்றும் அமைக்கப்பட்டது. சகலரும் இதில் பங்கு பற்றினர்.

## விஸ்வமடுவில் 300பேருக்கு நிலம்

அரியாலை, சனி

விஸ்வமடுவில் காணி வழங்குவதற்கு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் விண்ணப்பங்கள் கோரியுள்ளார். படித்துவிட்டு வேலையற்றிருக்கும் 18 வயதுக்கும் 30 வயதுக்குமிடைப்பட்ட 300 பேருக்கு 4 ஏக்கர் வீதம் இக்காணி பிரித்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## இருபோட்டிகளில் முதற்பரிசு

யாழ்ப்பாணம், ஞாயிறு

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி செல்வி கௌரிசங்கரி சண்முகசுந்தரம் வடமாகாண ஆசிரியர் சங்கம் நடாத்திய பேச்சுப்போட்டியிலும்சைவசமய அபிருத்திக் கழகம் நடாத்திய கட்டுரைப்போட்டியிலும்முதலாவது பரிசைப் பெற்றுள்ளார்.

### நாடகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வண. நீ. சவரிமுத்து அடிகளார் கதை வசனம் எழுதித் தயாரித்த ‘அன்பில் மலர்ந்த அமரகாவியம்’ என்ற நாடகம் அடுத்த மாதம் 5-ம் திகதியே மேடை ஏற்றப்படவிருப்பதாக திருமறைக்கலாமன்றத்தினர் தெரிவிக்கின்றனர் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இந்த நாடகம் மேடையேற்றப்படும்.

### இன நல்லெண்ண...

3 ம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு இணங்கியுள்ளனர்.

இக் கொண்டாட்டங்களின் ஓர் அம்சமாக நகரத்தில் வதியும் பல்வேறு இனப் பிரமுகர்களையும் அழைத்து [illegible] விருந்துபசாரம் ஒன்றை அளிக்க நியூஹாஸின் நகரமேயர் ஒழுங்கு செய்துள்ளார்.

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 7-ம் திகதி (21-3-71)

மேஷம்- உள்ளத்தில் உவகை துள்ளும். நண்பர்கள் உங்களை உற்சாகமாக வரவேற்பார்கள். இன்று வெற்றித்தினம்.

ரிஷபம்- உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று பார்க்கப்படும், அன்னபோசனத்தின் மூலம் வயிற்றுக்கோளாறு ஏற்படும்.

மிதுனம்- வாழ்வுப் பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும். இலட்சியவாதிகள் பூரிப்படைவார்கள்

கடகம்- நம்பிக்கை மோசடி மூலம் நலிவுகள் தென்படும். நண்பர்களின் தொல்லைகள் நன்கு அதிகரிக்கும்

சிம்மம்- பொறியியலாளருக்கு இன்று பொன்னான தினம். பூமி விவகாரத்தில் இன்று நல்ல முடிவு ஏற்படும்.

கன்னி- கடமையாற்றுமிடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும் புதிய கண்டுபிடிப்புக்களில் ஊக்கம் ஏற்படும்.

துலாம்- புதிய வழிகள் மூலம் பொருள் வரவுக்கு இடமுண்டு. சிலருக்குப் பதவி உயர்வும் கிடைக்கலாம்,

விருச்சிகம்- இன்று உடல் நலம் பாதிக்கப்படலாம். வாய்வுப் பதார்த்தங்களை இன்று தவிர்த்துக்கொள்ளவும்.

தனுசு- ஜன்னலின் பின்னல் உங்களுக்குச் சோர்வைத் தரலாம். வீட்டில் குழந்தையொன்றின் உடல் நலம் பாதிக்கப்படலாம்,

மகரம்- சமயோசிதமான நடவடிக்கைகள் மூலம் எதையும் சமாளித்துக் கொள்ளலாம். இல்லறத்தில் அமைதியும் நிலவும்-

கும்பம்- எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம். சிலர் வாழ்க்கையில் கடன்தொல்லையும் அதிகரிக்கலாம்.

மீனம்- தன்மான மிகுதிக்கும் தனவரவுக்கும் இடமுண்டு சிலருக்கு வாகன சுகமும் கிடைக்கும். குடும்பத்தில் தென்றல் வீசும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றலா; சென்ஜோன்ஸா?

# ஈழநாடு நடாத்தும் கிரிக்கெட் புதிர் போட்டி

யாழ் மத்திய கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெறவிருக்கும் 73-வது கிரிக்கெட் போட்டியையொட்டி 'ஈழநாடு' நடாத்தும் 'கிரிக்கெட் புதிர் போட்டி'

## புதிருக்கான கேள்விகள்

(1) கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கான கோஷ்டியைத் தெரிவு செய்வதற்கு 'பூவா-தலையா' போட்டுப் பார்க்கும் போது யாருக்கு வெற்றி கிடைக்கும்?

(2) கிரிக்கெட் போட்டியில் யாருக்கு இறுதி வெற்றி கிடைக்கும்?

(3) கூடுதலான விக்கெட்டுக்களை 'பேஸ்மன்'களா 'ஸ்பின்னர்'களா எடுப்பார்கள்?

(4) முதல் இன்னிங்ஸில் கூடுதலான ரன்களை எந்தக் கோஷ்டி எடுக்கும்?

(5) இரண்டு இன்னிங்ஸிலும் இரு கோஷ்டிகளிலும் யார் கூடுதலான விக்கெட்டுகளை விழ்த்துவார்கள்?

(6) முதல் இன்னிங்ஸில் சென். ஜோன்ஸ் காப்டனு சென்றல் காப்டனு கூடுதலான ரன்களை எடுப்பர்?

(7) இப்போட்டியில் 'ஓல் றவுண்டர்'ருக்கான பரிசை யார் பெறுவார்கள்?

(8) இப்போட்டிக்கு யார் யார் மத்தியஸ்தம் (அம்பயஸ்) வகிப்பார்கள்?

## போட்டி நிபந்தனைகள்

0 ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்

0 எல்லாம் சரியான விடைகளுடன் கூப்பன் கிடைக்காத பட்சத்தில் ஆகக் கூடிய சரியான விடையுடன் வரும் கூப்பனுக்கு முதல் பரிசு வழங்கப்படும். கூடுதலான சரியான விடைகளை அனுப்பும் மற்றும் நால்வருக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

0 கூப்பன்களை 'ஈழநாடு' கிரிக்கெட் புதிர், 'ஈழநாடு' த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

0 புதிர் போட்டிக்கான மத்தியஸ்தர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

0 கூப்பன்களுடன் வராத விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

0 புதிருக்கான விடைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 22-3-71 நண்பகல் 12 மணிக்கு முன்.

0 உங்கள் விடைகளை அழகாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும்.

### பரிசு வழங்குவோர் விபரம்

'ஸ்ரில்' புகைப்படப் பிடிப்பாளர் திரு. கனகலிங்கம் (சிட்டு)

யாழ். மெட்டல் இன்ஸ்றீஸ் ஸ்தாபனம்

'லிங்கம் ரெகிஷஸ்' பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

'பிறின்ஸ்' ஸ்ருடியோ பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

திரு. சி. கணேசன் 'ஹரி' ஒலி, ஒளி அமைப்பாளர் சப்பல் வீதி யாழ்ப்பாணம்

காலஞ் சென்ற பிரபல விளையாட்டு வீரரும், யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவருமான திரு. வி. மி. மகாலிங்கத்தின் ஞாபகார்த்தமாக இவரின் சகோதரர் திரு. வி. ரி. சிவலிங்கமும் ஒரு பரிசை வழங்க முன்வந்துள்ளார்


"ஈழநாடு"
நடாத்தும்
கிரிக்கெட்
'புதிர் போட்டி'
கூப்பன்

பெயர் ..................................................

விலாசம் ..................................................

..................................................

..................................................
கையொப்பம்


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 21-3-71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள் 7-15 மெல்லிசை, 7-30 கிறிஸ்தவ சேவை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344மீ அன் 49 மீ**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீ அன்ட் 61 மீ**

மாலை 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 வயலின், 6-30 கிராமியப்பாடல்கள், 6-45 கண்ணகி காவியம், 7-00 பேச்சு, 7-15பாட்டு, 7-45நாடகம், 8-00முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.

## மெய்வல்லுனர்ப் போட்டி

யாழ்ப்பாணம்,ஞாயிறு கோப்பாய் வட்டாரம் கனிஷ்ட பாடசாலைகளினதும் கனிஷ்ட பிரிவுகளினதும் ஆசிரியர்களினதும் மெய்வல்லுனர்ப் போட்டி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நேற்றுத்தொடங்கியுள்ளது.

இறுதிப்போட்டி இம்மாதம் 23ம் திகதி நடைபெறும் இப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்குரிய பரிசில்களை பிரதம கல்வியதிகாரி திரு எஸ் சந்திரசேகரம் வழங்குவார்.

## மாணவர்சுற்றுலா

யாழ்ப்பாணம், ஞாயிறு கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையைச் சேர்ந்த 5-ம், 4-ம், 3-ம் வகுப்பு மாணவர்கள் தலைமையாசிரியர் திரு த. தருமலிங்கம் தலைமையில் இம்மாதம் 16ம் திகதி யாழ். சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

யாழ் நகரிலுள்ள கோட்டை பண்ணைபாலம், சுப்பிரமணியம் பூங்கா, லேடன் தொழிற்சாலை முதலிய இடங்களைப் பார்வையிட்டபின், 'ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்திற்கும் விஜயம் செய்தனர். அதன்பின் மில்க்வைற் சோப்புத் தொழிற்சாலை, திருநெல்வேலி கமத்தொழிற் பாடசாலை, வசாவிளான் தோலகட்டி, பலாலி விமான நிலையம் ஆகிய இடங்களைப்பார்வையிட்டனர். அதன்பின் மாவிட்டபுரத்திற்கூடாகக் கீரிமலைக்குச் சென்று பகல் போசனம் செய்தனர். சிறிதுநேர ஆறுதலின்பின் தங்கள் சுற்றுலாவைத் தொடர்ந்தனர்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, கலங்கரைவிளக்கம் துறைமுகம் என்பனவற்றைப் பார்வையிட்டபின் வல்லை நெசவுத் தொழிற்சாலைக்குச் சென்றனர் பின் செல்வச்சந்நிதிக்குச் சென்று வழிபாடு செய்ததுடன் நிலாவரை, கைதடி நவீனட் பாடசாலை ஆகியவற்றிற்கும் சென்று பார்வையிட்டனர். கைதடிப் பாடசாலையில் தங்களைப் போன்ற சிறுர்கள் பிறவிக் குறைபாடுடன் இருப்பதைப் பார்த்துச் சிறிது சன்மானமும் வழங்கினார்கள்.

(கு வி ம)

## காப்பாற்றினர்

யாழ்ப்பாணம் ஞாயிறு கிணற்றில் தவறிவிழுந்து ஆதரவற்ற நிலையில் தத்தளித்துக்கொண்டிருந்த ஒரு இளம் பெண்ணின் உயிரை யாழ்ப்பாணம் மின்சார நிலைய ஊழியர் காப்பாற்றினர்.

யாழ். மின்சாரநிலைய வளவுக்குள் குடியிருக்கும் பிரஸ்தாப பெண்ணை அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் தக்கசமயத்தில் காப்பாற்றினர ஆயினும் அறிவிழந்த நிலையில் இளம் பெண் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (தே. நி)

## பேராசிரியர் அல்ஃபன் இங்கு வந்துள்ளார்

கோட்டை, சனி கடந்த ஆண்டு பௌதிகத்துறையில் நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் ஹனெஸ் அல்ஃபன் இன்று இலங்கை வந்துள்ளார்.

இவரும் இவரது பாரியாரும் இலங்கையில் 6 நாட்கள் தங்கிநிற்பர். சுவீடனைச் சேர்ந்த இப் பேராசிரியர் கலிபோர்னியா பல்கலைக்கழகம் சன்டியாகோ, ஸ்ரொக்கோம் தொழில்நுட்பக் கல்லூரியின் பௌதிகத் தலைமைப் பதவியை வகித்தவர்.

# மேற்கு வங்க உதைபந்தாட்ட கோஷ்டி யாழ். வருகிறது

பருத்தித்துறை, சனி இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத முதல் வாரத்தில் மேற்கு வங்காள உதைபந்தாட்டக் கோஷ்டி இலங்கைக்கு வரவிருப்பதாகவும், அவர்கள் பருத்தித்துறைப் பகுதியில் வடமராட்சித் தெரிவுக் கோஷ்டி ஒன்றுடன் மோதவிருப்பதாகவும் தெரிகிறது. இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை வடமராட்சி உதைபந்தாட்டக் கழகங்கள் மேற்கொண்டிருப்பதாகவும், இத்தெரிவுக்கோஷ்டிக்கான பயிற்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் விரைவில் நடைபெறவிருப்பதாகவும் நெல்லியடி பட்டினசபை உறுப்பினர் திரு. ந. கனகசுந்தரம் தெரிவித்தார். திரு கனகசுந்தரம் இதற்காக வடமராட்சி உதைபந்தாட்டக்கழகங்களின் கூட்டம் ஒன்றை இவ்வாரம் கூட்டுகிறார்.

மென்பந்தாட்ட கிரிக்கெட்

# தபால் அதிபர்களுக்கு இன்னிங்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் தபால் பொறியியலாளர் பிரிவுக் கோஷ்டிக்கும் தபால் அதிபர்கள் பிரிவுக்கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான மென்பந்தாட்டக் கிரிக்கெட்போட்டியில் தபால் அதிபர்கள் கோஷ்டி இன்னிங்ஸால் வெற்றிபெற்றது

முதலில் துடுப்பெடுத்தாடிய பொறியியலாளர் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 11 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. எஸ். எம். பிலேந்திரனும், ஜி மரியநாயகமும் முறையே தலா 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

தபால்அதிபர்கள்கோஷ்டி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 91 ஓட்டங்களைப் பற்றது. இதில் பி, கனகரத்தினம், ஆர். எஸ். எஸ். ரதினசிங்கம் எஸ் எம் பிலேந்திரன், எஸ் முத்துக்குமாரசாமி, பி பி ஹஸன் ஆகியோர் முறையே 19, 19, 14 12, 11 ஓட்டங்களைப் பெற்றனர். தயாளரத்தினம் 4 விக்கெட்டுகளைவீழ்த்தினர்.

பொறியியலாளர்கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 12 ஓட்டங்களைப்பெற்றது. இதில் எஸ் எம் பிலேந்திரன் சிறப்பாகப் பந்துவீசி 6 விக்கெட்டுகளை அடுத்தடுத்து வீழ்த்தினர்.

ஆட்டமுடிவில் தபால் அதிபர்கள் கோஷ்டி இன்னிங்ஸாலும் 68 அதிகப்படியான ஓட்டங்களாலும் மிக இலகுவாக வெற்றிபெற்றது.

இப்போட்டி, வைத்தீஸ்வர வித்தியாலயமைதானத்தில் நடைபெற்றது. (கே. நி)

# யாழ்.கடல்தொழிலாளருக்கு பயிற்சி வகுப்பு

மாவிட்டபுரம், சனி யாழ்ப்பாணம் கடல் தொழிலாளருக்கு கடல் தொழிலில் பயிற்சியளிக்கப்படும். இதற்காக அரசு 35 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. அடுத்த மாதம் 4-ந் திகதியிலிருந்து பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

கடல் தொழில் அபிவிருத்தி ஏற்படுத்து முகமாக ஆரம்பிக்கப்படவிருக்கும் இப்பயிற்சி வகுப்புகளின் மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரையோரப் பகுதிக் கடற் தொழிலாளர் அதிக நன்மை பெறுவர். கூட்டுறவுப் பரிசோதகர் திரு. ரி. கனகரத்தினம் பயிற்சி வகுப்புகளை நடத்துவார்.

அடுத்த மாதம் 4-ந் திகதி ஆரம்பமாகும் முதலாவது வகுப்பு நவாலியிலும், அடுத்த வகுப்பு 18-ம் திகதி பலாலியிலும் நடைபெறும். 24-ந் திகதி மயிலிட்டியிலும் ஊறணியிலும், மே 2-ந் திகதி மாதகலிலும் வகுப்புகள் நடைபெறும்.

மே மாதம் 16-ந் திகதியிலிருந்து ஜூன் 7-ந் திகதி வரை கடற்தொழிலாளர் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு அவ்வப் பகுதிச் சங்க மண்டபங்களில் பயிற்சிகள் அளிக்கப்படவிருக்கிறது.

## நியமனம்

யாழ்ப்பாணம்,ஞாயிறு ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக திரு சி கந்தசாமி சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டார், இவர் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தீவுப்பகுதிக் காரியதரிசியும் வடஇலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்க உறுப்பினருமாவர்.

## வள்ளுவர்விழா கொண்டாடினர்

உடும்பராய், சனி உடும்பராய சைவத்தமிழ் வித்தியாசாலையில் திருவள்ளுவர் குரு பூசை கொண்டாடப்பட்டது.

வித்தியாலய அதிபர் திரு. கு. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில்ஆசிரியர் திரு. க. பாலசுப்பிரமணியம் உரையாற்றினர். பல மாணவர்களும் பேசினர்

மயிலிட்டிக்கழகம்

## இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும்

மாவிட்டபுரம், சனி வலிவடக்குப்பகுதி இளம் விவசாயிகள் சங்கங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட விவசாய அறிவுப் போட்டியில் மயிலிட்டி இளம் விவசாயிகள் கழகம் முதலிடம் பெற்றது.

தெல்லிப்பளையில் உள்ள விவசாயப் பகுதியின் காரியாலயத்தில் நடந்த இப்போட்டியில் முதலாம்இடத்தை மயிலிட்டி இளம்விவசாயிகள் கழகமும் 2-ம் இடத்தை மாவிட்டபுரம் பனைவீமன்காமம் இளம் விவசாயிகள் கழகமும் 3-ம் இடத்தை சுன்னாகம் இளம் விவசாயிகள் கழகமும் 4-ம் இடத்தை இணுவில் இளம் விவசாயிகள் கழகமும் பெற்றன. மயிலிட்டிக்கழகம் இறுதிப்போட்டியில் கலந்து கொள்ளத் தகுதிபெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனரக கைத்தொழில் விருத்தி செய்ய துரித நடவடிக்கை

## செயற்குழுக்கள் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்

கோட்டை, சனி

கனரக கைத்தொழில் அமைச்சு துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. நாட்டைக் கைத்தொழில் மயமாக்கி சோஷலிஸப் பாதைக்குக் கொண்டு செல்வதற்கான திட்டங்களை கைத்தொழில் அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

கனரக கைத்தொழில்களை நிறுவுவது சம்பந்தமாக ஆராய்வதற்கு செயற்குழுக்களை கைத்தொழில் அமைச்சு நியமித்துள்ளது.

இந்தச் செயற்குழுக்களிடமிருந்து கைத்தொழில் அமைச்சு கனரகக் கைத்தொழில் சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பணித்துள்ளது.

நாட்டின் பொருளாதார உற்பத்தியைத் துரிதமாக்கி, தன்னிறைவை ஏற்படுத்த கனரகத்தொழில் பெரிதும் உதவுமென்று கைத்தொழில் அமைச்சு நம்புகிறது.

---

பாலமுனை, சனி

பாலமுனை பூஞ்சோலை எழுத்தாளர் மன்றம் தனது முதலாவது ஆண்டு பூர்த்தி விழாவை அடுத்தமாதம் 2-ம் திகதி கொண்டாடவிருக்கிறது

## ஐ. அ. கு. அதிபர் சதாத் லிபியாவில் ஆலோசனை?

கெய்ரோ, மார்ச் 20

ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் அன்வர் சதாத், லிபியாவுக்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டதாகவும் அங்கு ராணுவ முகாம் ஒன்றில் தங்கி லிபியா தலைவர் கேணல் கடாஃபியுடன் ஆலோசனைகள் நடத்தியதாகவும் இங்கு செய்தி வெளியாகியுள்ளது.

மேற்காஸியாவில் தற்பொழுது உருவாகியுள்ள நிலைமைகள் குறித்தும், லிபியா, எகிப்து, சூடான் ஆகிய நாடுகளைக்கொண்ட ஐக்கிய அரபு இணைப்பை ஏற்படுத்துவது பற்றியும் அவர்கள் ஆலோசித்ததாகக் கூறப்படுகின்றது.

## வாலிபர் வயிற்றில் குழந்தை

மணிலா, மார்ச் 20

இங்கு 37-வயதுள்ள ஒரு வாலிபர் உடலிலிருந்து 4.1 கிலோ எடையுள்ள சதைப் பற்றை டாக்டர்கள் அறுவை சிகிச்சை மூலம் அகற்றினர். இரு குழந்தைகளுக்கான உடல், கைகால்கள் விரல்கள் நகம் முடி ஆகியவை வெட்டி எடுக்கப்பட்ட சதைப் பிரிவில் காணப்பட்டது. பெண்களுக்கு இது போன்ற அனுபவம் புதியதல்ல ஆனால் 10 லட்சம் ஆண்களில் ஒருவருக்கு இம்மாதிரி அனுபவம் ஏற்படுவது சாத்தியமாகலாம் என பிரதம டாக்டர் ஒருவர் கூறினார்.

## ஐந்து தடவை தோற்றவர்!

புவனேசுவரம், மார்ச் 20

உலகின் ஜனநாயக தேர்தல் சரித்திரத்திலேயே முதல்தடவையாக 5 தடவை தொடர்ந்து ஒருவர் தோற்றிருக்கிறார்

முன்னுள் ஒறிஸ்ஸா முதன் மந்திரியும், உட்கல் காங்கிரஸ் தலைவருமான பிஜு பட்நாயக் இப்போது நடந்த தேர்தலில் ஐந்தாவது முறையாகத் தோற்று நூறு சதவிகிதம் தோல்வியை றெக்கோட் செய்துள்ளார்.

4 ஒரிஸ்ஸா சட்ட மன்ற தொகுதிகளில் பட்நாயக் போட்டி போட்டுத் தோற்ருர்.

கஞ்சம் ஜில்லா பஞ்சா நகரிலிருந்து லோக சபைக்காக போட்டியிட்ட அவர் கம்யூனிஸ்ட் வேட்பாளரிடம் தோற்ருர்.

## விசாரணைக் குழு

கோட்டை, சனி

அரசாங்க பொறியியல் கூட்டுஸ்தாபனத்தின் ஊழல்களை விசாரணைசெய்ய நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு கூட்டுஸ்தாபன ஊழியர்கள். தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து வாக்குமூலங்களைப் பெறவிருக்கிறது.

1965-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் வரையிலுள்ள காலப்பகுதியில் மேற்படி ஸ்தாபனத்தின் நிர்வாகம் விநியோகம் நிதி ஆகியவற்றில் ஏற்பட்ட ஊழல்களை மேற்படி குழு விசாரணைசெய்யும்.

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிடெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இந்தியாவில்

## 1-வது மெழுகு நூதனசாலை

சென்னை, மார்ச் 20

இந்தியாவின் 1-வது மெழுகு நூதனசாலை தமிழ் நாட்டில் நிறுவப்படவுள்ளது.

இம் நூதனசாலை சென்னை அல்லது மகாபலி புரத்தில் நிறுவவிருப்பதாகச் சுற்றுலா அமைச்சர் திரு; ராஜராம் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் லெபனுன் போன்ற நாடுகளிலிருப்பது போல் அமைக்கப்படும் இந்த நூதனசாலையில் சிற்பங்களை லெபனுனைச் சேர்ந்த சிற்பி ஒருவரின் ஆலோசனையின்பேரில் நிறுவவிருப்பதாகவும் இங்குஇடம் பெறவிருக்கும் சிற்பங்கள் வரலாற்றுச் சிறப்பை பிரதிபலிப்பதாக அமையுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது!

## ஹாட்லிக்கு புதிய அதிபர்

பருத்தித்துறை, சனி

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலய அதிபர் திரு சி. இராசதுரை அடுத்தமாதம் முதலாம் திகதியிலிருந்து பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரிக்கு இதிபராக மாற்றப் பட்டுள்ளார். திரு. இராசதுரை ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றியவர் என்பதும், ஒரு சிறந்த விளையாட்டு வீரர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஹாட்லிக் கல்லூரி ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. சாம் தம்பாபிள்ளை. யோணி யோவிலுள்ள ஒர் உயர்தர கல்லூரி ஆங்கிலத் தலைமைப் பீடத்தில் இடம் பெற்றுள்ளார்.

## கருணாநிதிக்கு இசையாளர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் இசையாளர் ஐக்கிய அபிவிருத்தி சங்கம் தமிழ்நாட்டில் தி. மு. கழகம் மாபெரும் வெற்றியீட்டியவைப் பாராட்டி முதல்மந்திரி திரு. மு கருணாநிதிக்கு வாழ்த்துக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

இன்றைய உலகில் தமிழன் தலைநிமிர்ந்து சுதந்திரத்துடன் தனக்கென ஒரு நாடு உண்டு என்ற மனத்திருப்தியுடன் வாழச்செய்த அண்ணாவையும், தங்களையும் எங்கள் சந்ததி என்றென்றும் சிரம்தாழ்த்தி அஞ்சலி செலுத்திக் கொண்[illegible] என்று அந்த [illegible]துச் செய்தியில் [illegible]துள்ளனர்.

## கம்பர்மலை மாணவர் தரம் உயர்வு

யாழ்ப்பாணம், ஞாயிறு

உடுப்பிட்டி வட்டார கனிஷ்ட பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி சென்ற 8-ம், 9-ம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில்நடைபெற்றபோது கம்பர்மலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையினர் 50 புள்ளிகளைப் பெற்றனர்.

இருபதுக்கு மேற்பட்ட பாடசாலைகள் கலந்து கொண்ட இப்போட்டியில் இப்பாடசாலை மாணவ மாணவிகள் பல போட்டிகளில் முதலிடத்தையும் இரண்டாவதுஇடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

சென்ற வருடத்தைவிட இவ்வருடம் மாணவ மாணவிகளின் தரம் மிகவும் உயர்ந்திருந்தது. இதற்காக விளையாட்டுப்பகுதி ஆசிரியர் திரு. க. தம்பிராஜா [illegible] திரு. [illegible] சின்னத்தம்பியாலும் [illegible] [illegible] பட்டனர். (குவிம)

## சிவபால மகராஜ் யாழ். வருகிருர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஸ்ரீ சிவபால மகராஜ் அடுத்த ஏப்ரல்1ந்தேதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கிருர். முதலாந்திகதி தொடக்கம் 3ந் திகதி வரை இங்கு தங்கியிருக்கும் இவர், திவ்வியஜீவனசங்கத்தின் ஆச்சிரமத்தில் தங்கியிருந்து தினமும் மாலை5மணி முதல் 8 மணிவரைத் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

## புதிய பிரிவு வேண்டும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

புங்குடுதீவுக்கு கிராம சேவகர் பிரிவொன்றை புதிதாக ஏற்படுத்தவேண்டும் என்ற ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினத்தின் கோரிக்கையை மந்திரி ஏற்றுக் கொண்டார். புங்குடுதீவு மத்தி என்று புதிய கிராம சேவகர் பிரிவை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

## யாஹியா - முஜிபுர்

## பேச்சுவார்த்தையில் முன்னேற்றம்

டாக்கா, மார்ச்20

பாகிஸ்தான் ஜனுதிபதி யாஹ்யா ஙனுக்கும் ஷேக் முஜிபுர் ரஹ்மானுக்குமிடையில நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சிறிது முன்னேற்றம் கண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இருவருக்குமிடையே நடைபெற்ற 4-வது சந்திப்பின்பின்பு ஷேக்முஜிபுர் பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியில்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. அடுத்த பேச்சுவார்த்தை திங்கட்கிழமை நடைபெறலாமென்றும், இராணுவத்தினரின் துப்பாக்கிப்பிரயோகம்பற்றித் தான்கவனிப்பதாகவும் யாஹ்யாகான் மேலும் தெரிவித்தாகவும் கூறினுர்.

யாஹ்யாகானின் அவசரச் செய்தியை அடுத்து இன்று அல்லது நாளை மக்கள் கட்சித் தலைவர் சுல்பிகார் அலி பூட்டோ டாக்காசெல்லவிருப்பதாக இன்று கராச்சியில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு பூட்டோவுக்கு இருந்த பல சந்தேகங்களுக்கு யாஹ்யாகான் விளக்கம் அளித்திருப்பதாகவும் சில விஷயங்களைக் கலந்தாலோசிக்க மேற்குப்பாகிஸ்தானிலுள்ள மாகாணத்தலைவர்களை கராச்சிக்கு அழைத்திருப்பதாக திரு. பூட்டோ தெரிவித்தார்.

பூட்டோடாக்காசெல்லும்பொழுது 20 பேர்கொண்ட நிபுணர்குழு அவருடன்செல்லும்.

இதற்கிடையே ரஹ்மான், துப்பாக்கிப்பிரயோகம் நடந்த இடத்தில் விசாரணை செய்ய அனுப்பிய விஷேட குழு அப்பகுதிகளுக்குசென்று துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தவர்களைச் சென்று பார்த்தார்.

## யாழ். ஆஸ்பத்தி..

(1ம் பக்கத்தொடர்ச்சி)

ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கப் பொதுச்செயலாளர் திரு சூ. செந்தில்நாயகம் அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள ஆட்சேபக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது;

ஆஸ்பத்திரி நிர்வாகத்தினரால் கடந்தபல வருடங்களாக வருடாந்த 'சேர்வை' மூலம் கண்டு கொள்ள முடியாதிருந்த பல தகவல்களை இவ்வருடம் கணிப்பு உத்தியோகஸ்தர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான பொருட்களை பிணைப்பணம் அற்ற படிப்பு வாசனையற்ற சிறு ஊழியர்களிடம் பொறுப்புக் கொடுத்திருந்த ஆஸ்பத்திரி நிர்வாகத்தினரை நாம் கண்டிக்கிறேம். சிறு ஊழியரிடம் இப்பொறுப்பைக் கொடுத்த நிர்வாகத்தினரிடமிருந்தே இதற்கான தொகையை அறவிடவேண்டும்.

75 ரூபா அடிப்படைச் சம்பளம் பெறும் சிறுஊழியரிடம் மாதா மாதம் 100 ரூபா அறவிட முன்வந்திருப்பது இரக்கமற்ற செயலாகும். ஆங்கில அறிவு, பொருட்களின் தன்மை ஆதியன பற்றி எதுவுமே தெரியாத சிற்றூழியரிடம் நாலாயிரம், ஐயாயிரம் ரூபா இழப்புப்பணமாகக் கழிப்பதை நிறுத்திவைப்பதுடன் பாரபட்சமற்ற விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடமிருந்து இதற்கான தொகையை அறவிடும்படி கேட்டுக் கொள்ளுகிறேம்'.

இக் கடிதத்தின் பிரதிகள் யாழ் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிக்கும் சுகாதார இலாகா டைரக்டருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## திரும்புகிருர்

அளியாலை, சனி

நல்லை திருஞானசம்பந்த ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் இம்மாதம் 22ம் திகதி தலைமன்னர் ஊடாக தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணம் திரும்புகிருர்.

---

சிறு ஊழியரிடம் கழிக்கப் படவிருக்கும் தொகையை அவர்களிடமிருந்து கழிப்பதை நிறுத்தி வைத்து, உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க விசாரணை நடத்துமாறு அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்கமும் கோரியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org